# செம்பதாகை

மலர்: 1
இதழ்: 9
புரட்டாதி
1979
விலை சதம்: 50

புரட்சிகர வெகுஜன ஏடு


## யூ. என். பி. ஆட்சியே!

## அத்தியாவசிய பொதுச்சேவைகள் மசோதாவை

# வாபஸ் வாங்கு!!

நமது நாட்டின் தொழிலாளி வர்க்கம் தியாகம் நிறைந்த போராட்டங்களின் மூலம் வென்றெடுத்த பல ஜனநாயக உரிமைகளை இன்றைய யூ. என். பி. அரசு ஒன்றன்பின் ஒன்ருகப் பறித்து வருகின்றது. இன்று தொழிலாளிவர்க்கத்தின் ஜீவாதார உரிமையாக இருந்து வரும் வேலை நிறுத்தம் செய்யும் உரிமையைப் பறிக்கும் அத்தியாவசிய பொதுச் சேவைகள் மசோதாவை அரசு பாராளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. இம் மசோதாவை நாட்டின் சகல தொழிலாளர்களும் ஏனைய உழைக்கும் மக்களும் ஒன்றிணைந்து எதிர்த்து வாபஸ் பெறச் செய்வது அவசியமாகும்.

இப்பொழுது பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அத்தியாவசிய பொதுச்சேவைகள் மசோதா சட்டமாக்கப்பட்டால், அச் சட்டத்தைக் கொண்டு தொழிலாளி வர்க்கத்தையும் அவர்களது சகல கோரிக்கைகளையும் நசுக்குவதற்கு பயங்கர ஆயுதமாகப் பாவிக்கப்படும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

தான் விரும்பும்போது வேலை நிறுத்தங்களைத் தடை செய்வதற்கும், ஜனதிபதிக்கு அதிகாரம் அளிக்கும் சட்ட விதிகளை உள்ளடக்கியுள்ள மேற்படி மசோதா, அச் சட்டத்தையும் மீறி தொழிலாளர்களோ அல்லது தொழிற் சங்கங்களோ வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டால் அவர்களை சிறைத்தண்டனைக்குட்படுத்தி சொத்துக்களை பறிமுதல் செய்யும்சட்டவிதிகளையும்இம் மசோதா கொண்டுள்ளது. தொழிலாளர்களினதும், அவர்களது வேலை நிறுத்தம் செய்யும் உரிமையையும் அப்பட்டமாகவே அடக்கி ஒடுக்கும் சட்ட விதிகளை உள்ளடக்கிய இம் மசோதா நாட்டின் சகல பகுதித் தொழிலாளர்கள் தொழிலாளர்கள் ஒருபோதும் இம் மசோதாவிற்கு ஆதரவு கொடுக்க மாட்டார்கள்.

ஏனெனில் தொழிற்சங்கத் தலைவர்கள் தமது வர்க்க சகாவான யூ. என். பிக்கு ஆதரவு கொடுத்தாலும் தொழிலாளர்கள் தமது கழுத்துக்கு தாமே கயிறு போடும் நடவடிக்கைக்கு ஒரு போதும் சம்மதிக்க மாட்டார்கள்.

## வேலைநிறுத்தம் செய்யும் உரிமை தொழிலாளர்களின் ஜீவாதார உரிமை

மத்தியிலும் பெரும் எதிர்ப்பையும் கண்டனத்தையும் உருவாக்கியுள்ளது. யூ. என். பி. யின் தலைமையிலான தொழிற்சங்கத் தலைவர்களோ அல்லது தொண்டமான் போன்றவர்களோ இம் மசோதாவை ஆதரித்தபோதிலும் நிச்சயம் அவர்களது தொழிற்சங்கத்தில் உள்ள

யூ. என். பி. யின் ''தர்மிஷ்ட'' வேஷம் இன்று பல்வேறு வழிகளிலும் கலைந்து வருகின்றது. அதன் பொருளாதாரக் கொள்கை நமது நாட்டை மிக மோசமான நிலைக்கு கொண்டு சென்றுள்ளது. அந்நிய மூலதனத்திற்கு

(பக்கம் 8 பார்க்க)

## தமிழர் கூட்டணித் தலைவர்கள்

# பெட்டிப் பாம்பாகி விட்டனர்?

தமிழ் மக்கள் சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் மத்தியில் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் இன்று இருக்கின்றனர். தமிழ் மக்களின் இன்றைய நிலைக்கு இருபக்கக் காரணங்கள் இருந்த போதிலும் தமிழ்த் தலைவர்கள் எனப்படும் தமிழர் கூட்டணித் தலைவர்கள் தமது பொறுப்பை பொறுப்பற்ற முறையில் தட்டிக் கழித்து விட முடியாது. விடுதலை இயக்கம் எனத் தம்மைப் பறைசாற்றி, வீம்புத்தனமான பேச்சுக்களை நிகழ்த்தி அர்த்தமற்ற கோஷங்களைக் கொள்கையென வலியுறுத்தி இளைஞர்களை உசிப்பி விட்டனர். வெறும் உணர்ச்சிகள் மட்டும் சாதனைகளாக மாற முடியாது. சரியான கொள்கைகள் மட்டுமே சாதனைகளாகச் சரித்திரத்தில் இடம் பெற முடியுமென்பது, இவ்வேளை தமிழ் மக்களாலும் இளைஞர்களாலும் உணரப்படுகின்றது.

இன்று கூட்டணித் தலைவர்களின் பேச்சுக்கள் மறுமுனைக்குத் தாவிச் சென்றவர்களின் ஒரு பேச்சாகவே தென்படுகின்றது போலும், முற்றிலும் அடிபணிந்தவர்களின் வாய்களில் இருந்து வரும் பேச்சுத் தொனியைத் தான் இன்று கேட்க முடிகின்றது. சிறிது காலத்திற்கு முன் இரு தலைக் கொள்ளி எறும்பாகத் திகழ்ந்த கூட்டணித் தலைவர்கள் இன்று ஒருதலைக் கொள்ளியில் நின்று பேசுவதாகவே தமிழ் மக்கள் பேசிக்கொள்கிறார்கள். கட்டி ஆண்ட பரம்

(பக்கம் 8 பார்க்க)

செம்பதாகை

SEPTEMBER ✠ SEMPATHAKAI ✠ 1979

## சீனமக்கள் குடியரசு நீடுழிவாழ்க

சீன மக்கள் குடியரசு உதயமாகி முப்பது ஆண்டுகள் முடிவடைந்துவிட்டன. கடந்த முப்பது ஆண்டுகளில் சீனமக்கள் அரசியல், பொருளாதார, கலாச்சாரத் துறைகளில் மிகப்பெரும் முன்னேற்றங்களைக் கண்டு உலக நாடுகளின் முன்னிலையில் ஒரு முன்னுதாரணத்தையே உருவாக்கியுள்ளனர். காலத்துக்குக் காலம் உள்நாட்டு வெளிநாட்டு பிற்போக்கு சக்திகளால் உருவாக்கப்பட்ட பல தவருன தத்துவப்போக்குகளுக்கு எதிராக; நவீன திரிபுவாதம், வலதுசாரிப் பிறள்வுவாதம, அதிதீவிர இடதுசாரிவாதம் போன்ற சந்தர்ப்பவாத சக்திகளுக்கு எதிராகச் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் மாக்சிசம் - லெனினிசம்-மாசேதுங் சிந்தனை என்ற தத்துவ ஆயுதத்தைபாவித்து சீன மக்கள் வெற்றிமேல் வெற்றி பெற்று வந்துள்ளனர்.

மாக்சிசம் - லெனினிசம் - மாசேதுங் சிந்தனை என்ற தத்துவத்தின் வழிகாட்டலால் தவறுகள் எப்பொழுதும் தோற்கடிக்கப்படும் என்பது உறுதியானதாகும். இந்த அனுபவம் சீனக்கம்யூனிஸ்ட் கட்சிக்கும் சீன மக்களுக்கும் புதியவை அல்ல. சரியானவைகளை நடைமுறைப் படுத்தும்போது தற்புகழ்ச்சி அகங்காரம் கொள்வதோ, அல்லது தவறுகள் ஏற்படும்போது தளர்வடைந்து பின்வாங்குவதோ சீனக்கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தலைவர் மாஓ கற்றுக் கொடுத்த பாடமல்ல. வெற்றியின் போதும், தோல்வியின்போதும், முன்னேற்றத்தின் மத்தியிலும், பின்னடைவுகளின் மத்தியிலும் நிதானமாக நீண்ட நோக்குடன் செயல்பட்டு சரியானவற்றை முன்னெடுக்கும் பாரம்பரியத்தையே சீனக் கம்யூனிஸ்ட் கட்கியும் சீனமக்களும் நடைமுறை அனுபவமாகப் பெற்று வந்துள்ளனர்.

மேலாதிக்க வல்லரசுகளும் குறிப்பாக சோவியத்சமூக ஏகாதிபத்தியம் உலகின் முன் எந்த நிலையில் வளர்ந்து வருகின்றது என்பதை மாக்சிச - லெனினிசவாதிகள் மட்டுமன்றி தத்தமது நாட்டின் விடுதலை சுதந்திரம், சுயாதிபத்தியம் ஆகியவற்றில் அக்கறைகொண்டவர்களால்கூடப் புரிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது. அதனுலேயே இன்றைய காலகட்டத்தில் ''பலம் பொருந்திய ஒரு சீன உலக சமாதானத்திற்குத் தேவை'' என்பதைப் பல மூன்ரும் உலகநாடுகள் வாய்விட்டுக் கூறும் அளவிற்கு சீனவின் நிலை உலக அரங்கில் முக்கியத்துவம் அடைகின்றது. இந்த அவசியத்தை உணர்ந்ததாலேயே தலைவர் மாஓ இந் நூற்ருண்டு முடிவதற்குள் சக்தி மிக்க நவீன சோஷலிச தேசமாகச் சீனவை மாற்றிஅமைக்கும் கொள்கையை வகுத்தார். தலைவர் மாஓவிற்குப் பின்பு அதே பாதையைப் தோழர் குவா கோ பெங் அவர்களைத் தலைவராகக் கொண்ட சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மேலும் முன்னெடுத்து வருகின்றது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் சீன மக்கள் குடியரசு பல வெற்றிகளைப் பெற்று சீன மக்களுக்கும் உலக மக்களுக்கும் மேலும் பல சாதனைகளை வழங்க வேண்டும் என அதன் முப்பதாவது நிறைவு நாளிலே வாழ்த்துகின்ருேம்.

பாட்டாளி வர்க்கம் தனது விடுதலையைப் போர்க்களத்தில்தான் பெறமுடியும்

# கருத்தும் கண்ணோட்டமும்

**ஜனமகன்**

## அநீதிகள் முழுமூச்சு "தார்மீகம்" வெளிப்பூச்சு

எதிர்பார்க்கப்பட்டது போலவே பயங்கரவாத ஒழிப்புச் சட்டமும். அத்தியாவசிய சேவைகள் சட்டமும், மக்களின் வாழ்க்கைத்தரங்களின் மீதும் ஜனநாயக உரிமைகள் மீதும் அரசாங்கத்தின் தாக்குதல்களுக்கான திட்டமிட்ட முன்னோடி நடவடிக்கைகளாகவே அமைந்துவிட்டன. வடக்கில் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காகத்தான் இவை கொண்டுவரப்பட்டன என்ற போலிக் கதைகளை இப்பொழுது யாரும் நம்பத் தயாராய் இல்லை. அடக்குமுறைச் சட்டங்களினால் தன்னை கணிசமான அளவு பலப்படுத்திக் கொண்டுவிட்ட அரசாங்கம் வரவு செலவுத் திட்டத்தைக் கொண்டுவருவதற்கு முன்னதாகவே அத்தியாவசிய உணவுப் பண்டங்களின் விலைகளை அதிகரித்து விட்டது. மண்ணெண்ணையின் விலை கலன் ரூபா 10-70 சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. பாணும் மாவும் ரூபா 1-15 ஆகவும் ரூபா 1-30 ஆகவும் முறையே அதிகரிக்கப்பட்டுள்ளன. லக்ஸ்பிறே ருத்தல் ரூபா 2-00 வீதம் கூட்டப்பட்டுள்ளது. வரவு செலவுத் திட்டத்தில் மேலும் விலை அதிகரிப்புகள் அறிவிக்கப்படலாம். மிகவிரைவில் மக்கள் விலை கொடுத்து வாங்கும் அளவில் பாவனைப் பொருட்கள் இருக்கமாட்டாதென்பது திண்ணம். உணவு முத்திரைகள் மாதம் ரூபா 300க்கு குறைவான வருமானமுள்ள- உண்மையில் ஏழைகளான மக்களுக்கு உதவுவது போல் தோன்றினாலும் ஒரு மோசடியே. கூப்பன் முறையானது மக்களுக்கு கணிசமான அளவு உணவுப்பண்டங்கள் கிடைப்பதை உறுதிசெய்வதாக இருந்தது. ஆனால் உணவு முத்திரைகளைப் பொறுத்தவரை தொடர்ச்சியாக விலைவாசிகள் ஏறிக்கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் உணவுப் பொருட்கள் சிலவற்றைத்தான் பெறுவதற்கு உதவியாக இருக்கும். தார்மீகத்தைப் பற்றி பிரமாதமாகப் பீற்றிக் கொண்ட இந்த அரசு ஏழைகளை எந்தளவு மோசமாக காலடியில் போட்டு நசுக்குகிறது என்பதை இது காட்டுகின்றது. இதில் இன்னும் கொடுமை என்னவென்றால் பயன்படுத்திக் கொள்ளாத உணவு முத்திரைகளை தேசிய சேமிப்பு வங்கியில் போட்டுவைத்துக் கொள்ளலாம் என்ற விசித்திரப் பிரசாரமாகும்.

சகல உதவி மான்யங்களும் உலக வங்கியின் ஆணையின்படி ஒழிக்கப்பட்டு வருகின்றன. அபிவிருத்தியடைந்த கடன் கொடுக்கும் நாடுகளிடமிருந்து நாம் இறக்குமதி செய்ய வேண்டும் என்பதுதான் அதன் விருப்பம்- இந்தக் கடன்களைத் தவணை முறையில் செலுத்தும் நிலையில் நாம் இருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதே அதன் நோக்கம் இந்த நிலைமையில், நமது அரசாங்கத்துக்கு, தான் பிரதிநிதித்துவப்படுத்தும் வர்க்கத்தினர் தாராளமாகச் செலவழித்து அனுபவிப்பதற்காக நிறைய பணம் தேவைப்படுகிறது. இதனால், நமது பிள்ளைகளதும், பேரப்பிள்ளைகளதும் எதிர்காலத்தை இதயமற்ற முறையில் அடமானம் வைப்பதில் அரசு ஈடுபட்டுள்ளது. அபிவிருத்திக்காகவே கடன் வாங்குகிறோம் என்பது வெறும் கண்துடைப்புக்கே தான். சகல மான்யத் திட்டங்களுமே சரியில்லையென்று கருதுகிறவர்கள் பிரச்சினைகளை குழப்பியிருக்கிறார்கள். வேலை வாய்ப்புக்களும் தாராளமாக இருந்து, விலைவாசிகளும் உறுதியாக ஒரேமட்டத்தில் நிலைக்கக்கூடிய ஒரு வளரும் சமுதாயத்திலென்றால் மான்யத் திட்டங்கள் நிச்சயமாக கேள்விக்குரியவை தான். ஆனால் நீடித்த வேலைவாய்ப்பின்மையாலும் பணவீக்கத்தினாலும் அவதியுறும் ஒரு பொருளாதார அமைப்பிலே அவை அவசியமாகின்றன. முதலாளித்துவ பொருளாதார நிபுணர்களின் கருத்துப்படி உற்பத்திச் செலவுகளை ஒரு குறிந்த அடிமட்டத்தில் வைத்துக் கொள்வதற்காக வளர்ந்த நாடுகளில் ஒரு குறிப்பிட்ட அளவு மக்கள் வேலையற்றவர்களாக இருக்க வேண்டும், அதற்காகவே உபகாரப்பணம் வழங்கப்படுவதுண்டு. வளர்ச்சியடையாத நாடுகளில் பெரும்பான்மையான மக்கள் உயிர் வாழ்வதற்காகவேனும் மான்யங்கள் அவசியப்படுகின்றது. இல்லையெனில் அடுத்த நாள் வேலைக்குத் திரும்புவதும் கூட அவர்களால் முடியாது போய்விடும். இங்கே வேடிக்கை என்னவென்றால் ஒரு வளர்ச்சியடைந்த நாட்டைப் போல அரசாங்கம் உபகாரப்பணம் வழங்குவதாகக் கூறிக்கொண்டு சகல வித மான்யங்களை ஒழித்துக்கட்டுகிறது.

★ ★

## சட்டங்களும் சாகஸங்களும்

பஞ்சம், தாங்கமுடியாது வாழ்க்கைப் பளு போன்ற நிலைமைகளுக்குமுகம்கொடுக்க நேர்கையில் கொந்தளிப்புகளும் புரட்சிப் போராட்டங்களும் ஏற்படுவது தவிர்க்கமுடியாத சரித்திர சம்பவங்களாகும். இந்த நிலைமைகளை எதிர்த்துச் சமாளிக்க அரசாங்கம் அதன் பாரம்பரிய தெய்வங்களான பயங்கரச்சட்டங்கள், இனவாதம், மற்றும் மக்களை போதை கொள்ளச் செய்யும் தந்திரோபாயங்களை வணங்க ஆரம்பித்துள்ளது. இவைகள் தாம் தன்னைக் காப்பாற்றும் என்று அரசு நம்புகின்றது.

புலி இயக்க ஒழிப்புச் சட்டம், பயங்கரவாத ஒழிப்புச் சட்டம், அத்தியாவசிய சேவைகள் சட்டம் ஆகியவற்றை அரசு நிறைவேற்றியுள்ளது. எங்காவது எப்பொழுதாவது எதிர்ப்புத் தலைதூக்குமானால் அதனை நசுக்குவதற்கு வேண்டிய நடவடிக்கையில் இறங்க அரசு இச்சட்டங்களால் தனை பலப்படுத்திக் கொண்டுவிட்டது.

அரசு தன்னைக்காப்பாற்றிக் கொள்ள கைக்கொள்ளும் மற்றொரு உபாயம்தான் இனவாதம். ஏதாவது ஒருவகை எதிர்ப்பு எங்காவது கிளம்பும் சமயங்களில் ஒருசிறுபான்மை இனத்தைத் தெரிவு செய்துகொண்டு அரசாங்கம் தனது அடிவருடிகளான மக்கள் தொடர்பு சாதனங்களின் துணையோடு அந்தஇனத்துக்கு எதிராக இனவாதப் பிதற்றல்களை அவிழ்த்துவிட்டு சந்தேகம் கொள்ளத் தெரியாத பெரும்பான்மை மக்களைத் தூண்டிவிடுகின்றது. சுற்றுலாச் சென்று திரும்பிய கையோடு பிரதமர் பிரேமதாசா பாராளுமன்றத்தில் தமிழ்மக்களுக்கெதிரான இன உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் வகையில் நிகழ்த்திய முசலாவது பேச்சு ஒன்றே இதனை உறுதிப்படுத்துவதாகவுள்ளது.

மூன்றாவது என்னவென்றால் தம்மை உறுத்திக்கொண்டிருக்கும் பிரச்சினைகளின் உண்மை நிலையை மறக்கச் செய்வதற்காக சாகசங்கள் 'சர்க்கஸ்'கள் முதலியவற்றால் மக்களைப் போதையுறச் செய்வதாகும். உழைக்கும் மக்கள் அமைதியிழக்க நேரும்போதெல்லாம் ரோம் ஆட்சியாளர்கள் ரொட்டிகளைக் கொடுத்தும் சர்க்கஸ்களைக் காட்டியும் துன்பங்களை மறக்கச் செய்வார்கள் என்று கூறப்படுவதுண்டு. நமது ஆட்சியாளர்கள் அவர்களுக்கு எந்த வகையிலும் குறைந்தவர்களில்லை. ஒரே ஒரு வித்தியாசம் எமக்கு போதுமான அளவு சர்க்கஸ் கிடைக்கிறது ஆனால் ரொட்டியைத்தான் காணவில்லை. பரபரப்பூட்டும் அப்படியான பல சாகசங்களை நாம் பார்த்துவிட்டோம்- வழக்கத்துக்குமதிகமான விளையாட்டுப் போட்டிகள், வெட்கப்படும்படியாக தோல்வியில் முடிந்த போதிலும் வெளிநாடுகளில் கிரிக்கட் சுற்றுலாக்கள், விசேஷமாக பச்சையான பால் உணர்வைத் தூண்டும், வன்முறைகளையும், பயங்கரத்தையும் சித்தரிக்கும் இறக்குமதிச் செய்யப்பட்ட படங்கள், அப்பலோ சர்க்கஸ், 'பொப்' நிகழ்ச்சிகள் யாவும் ஏராளம் ஏராளம். குத்துச்சண்டை வீரர் முகம்மது அலியும் கூட அழைக்கப்பட்டிருப்பதாக அறிகின்றோம்- அடுத்தபடியாக இடியமின் இங்கு வந்து நம்மை மகிழ்சியுறச் செய்து எல்லாவற்றையும் மறக்கச் செய்ய முயன்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

சட்டங்கள் என்னதான் அடக்குமுறையாக அமைந்தாலும், இனவாதம் என்னதான் பிரிவுகளை ஏற்படுத்துவதாய் இருந்தாலும், சாகசங்கள் என்னதான் பரபரப்பூட்டுவவையாக அமைந்தாலும், மக்களின் ஆத்திரத்தைத் தணிய வைப்பதில் வெற்றிபெற முடியாது என்பது சரித்திர உண்மையாகும.

★ ★

## ராணுவம் இல்லாதநாடு

கொஸ்டாறிக்கா நாடு 30 ஆண்டுகளுக்கு முன்னர் தனதுராணுவத்தைக் கலைத்துவிட்டது மாத்திரமின்றி அரசியல் யாப்பிலேயே அதனைத் தடைசெய்து விட்டது என்று டெய்லி நியூஸ் பத்திரிகையின் 'கொலம்' எழுத்தாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். அந்த நாட்டின் ஜனாதிபதி டேனியல்ஒதுபர் கூற்றுப்படி, சமூக, கல்வி, பொருளாதாரத்துறைகளில் அந்த நாடு இராட்சத வேகத்தில் முன்னேறியுள்ளதாம். ஏழை மூன்றாம் உலக நாடுகள் இந்த உதாரணத்தை நன்றாக பின்பற்றி பயனடையலாம் என்கிறார் அந்த ஜனாதிபதி.

ஆனால் இதை ஏற்றுக்கொள்வார்களா? உதாரணமாக நமது ராணுவத்தை எடுத்துக் கொள்வோம், பெரும் செலவில் நடத்தப்படும் இந்த ராணுவத்தினால் எதிரிதாக்குதல் ஏற்பட்டால் தாக்குப்பிடிக்க முடியாது. அப்படியானால் இது எதற்காக மக்களைப் பயமுறுத்துவதும், அநீதிகள், மனிதத் தத்துவத்துக்கு மாறான நடவடிக்கைகளுக்கு எதிராக மக்கள் வெகுண்டெழாமல் பார்த்துக் கொள்வதும் இவர்களின் வேலை. இன்று நமது நாட்டிலுள்ள நிலைமைகளைப் பார்க்கும்போது கொஸ்டாறிக்கா ஜனாதிபதியின் முன்மாதிரியை நமது தர்மிஸ்ட ஜனாதிபதியினால் பின்பற்ற முடியுமா என்று நினைத்துப் பார்ப்பதும் சாத்யமில்லை.

★ ★

## கோஷ்டிகள் மூன்று ஆசாமி ஒன்று

அண்மையில் இரகசியமாகக் கருத்தரிக்கப்பட்டு ஆறு வாரத்தோடு பிரசவிக்கப்பட்ட ஒரு கேலிக்கூத்தை விஷயம் அறிந்தவர்கள் நல்ல விதத்தில் கணிப்பீடு செய்து வைத்திருக்கிறார்கள், திரிபுவாத கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, ஜனதா விமுக்தி பெரமுனே. ஆகியவை ஒன்று கூடியுள்ளன. கடைசியில் அந்தப் பழைய கைங்கரியத்தைச் செய்வதற்காகத்தான் இவர்கள் ஒன்று கூடியுள்ளார்கள், ஏகாதிபத்தியத்துக்கும், தேசிய நிலபிரபுத்துவ மிச்சசொச்சங்களுக்கும் எதிரான சகல மக்களதும் கூட்டிணைப்புக்கு எதிராகச்சதிசெய்வதும், உலகமுழுவதும் சமூக ஏகாதிபத்தியத்துக்கு உதவி புரிவதும் இவர்களின் நோக்கம். இந்த மூன்று பிரிவினருக்கும் பணம் கொடுக்கும் எஜமான் ஒரே ஆசாமிதான் மூன்று விதக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், அல்லது சுவரொட்டி விளம்பரங்களுக்கு வழங்கும் ரூபிள் செலவானது ஒன்றுக்கு ஆகும் செலவை விட அதிகமாகவே இருக்கும் என்பதை தனது நீண்டகால ஏகாதிபத்திய அனுபவத்தின் மூலம் அவர் நன்கு அறிந்தே வைத்திருப்பார். ஏப்ரல் கிளர்ச்சியின் போது ல. ச. ச. கட்சியும் திரிபுவாதக் கம்யூனிஸ்ட் கட்சியும் ஜே. வி. பி. யை இனி வார்த்தையே இல்லையென்று சொல்லுமளவுக்கு வன்மையாகக் கண்டித்து வந்தன. ஜே. வி. பி. தலைவர்கள் விடுதலையானதும் இந்த இரண்டு கட்சிகளையுமே அவர்கள் குறி வைத்துத் தாக்கி வந்தார்கள். இப்பொழுது இந்த மூன்று கோஷ்டியினரும் ஒன்று சேர்கிறார்கள் என்றால் ரூபிளின் சக்தியைத்தான் அது எடுத்துக் காட்டுகின்றது. இந்த எஜமானரால் நிதி கொடுத்து வளர்க்கப்பட்டு உயர்ந்தரகக் கடதாசியில் அச்சிடப்படும் சில சஞ்சிகைகளும் கூட விரைவில ஒன்றாக இணைந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. ★

## ஒரு நடனம் பாரீர்

அண்மையில் அட்டன் நகரில் ''பாஞ்சாலி சபதம்'' என்ற ஒரு பரதநாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் முக்கியமாக ஒரு பெண்மணி நடனம் ஆடினார். அவர் யார் தெரியுமா? பாட்டாளி வர்க்கப் புரட்சியைப் பற்றியும், பாட்டாளிகளுக்காகப பாடுபடுவதாகவும் கூறிக்கொள்ளும் 'தோழர்' சண்முகதாசனின் மகளான திருமதி ராதா தம்பிராசா அவர்களே யாகும். நாட்டின் பல பகுதிகளில் பல பரதநாட்டியங்கள் அரங்கேற்றப்படுகின்றன. அவை பற்றி நாம் பிரஸ்தாபிக்கவில்லை.

ஆனால் இந்தப்பெண்மணி கலாச்சாரப் புரட்சி சீனாவில் நடந்த வேளை அங்கு கல்வி கற்றவர். அவர் நாடு திரும்பியதும் பாட்டாளி வர்க்க கலை இலக்கியம் பற்றி அளந்து கொட்டிய கதைகளை மறந்து இன்று பிற்போக்கு நடனம் ஆடியது ஏன்? இரகசியம் கண்டுபிடிக்க முடியாத ஒன்றல்ல. அதாவது சண்முகதாசனும், அவரது மகளினதும் குடும்ப நிலை இன்று மிக வசதி படைத்த லட்சாதிபதியின் குடும்பநிலைக்கு மாறிவிட்டது. இன்று இலங்கையில் உள்ள லட்சாதிபதிகளுக்கு எந்த கலை இலக்கியம் வேண்டும். பாட்டாளி வர்க்க கலை இலக்கியம் அல்ல. முதலாளித்துவ கலை இலக்கியமேயாகும். தமது குடும்ப அந்தஸ்து, குடும்ப கௌரவம் சுருங்கக் கூறின் தமது வர்க்க அந்தஸ்துக்கு பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்ச்சி மிகவும் தேவையானதாகும். சில வேளை இந்த நடனத்திற்கும் தனக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லையென்று திருவாளர் சண்முகதாசன் அதிருப்தியடையும் தனது ஆதரவாளர்களை ஏமாற்றலாம். உண்மை என்னவெனில் இப்பரதநாட்டிய அரங்கேற்றத்தின் முன் வரிசையில் திரு சண்முகதாசனும் அவரது சீமாட்டியும் உட்கார்ந்து ஆரவாரித்து ஆதரவு நல்கியதாகும். சண்முகதாசனும் அவரது குடும்பமும் சொத்து சுகபோகத்தை அனுபவித்து அவர்கள் தங்களது வர்க்க நடனத்தை ஆடுவது பற்றி எமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் சாதாரண மக்களையும் பாட்டாளி வர்க்கத்தையும் ஏமாற்றும் வேலையைக் கைவிட்டால் மட்டும் போதுமானதாகும்.

**நீதியான லட்சியம் எந்தத் தடைகளையும் மீறி இறுதியில் வெற்றி பெற்றே தீரும்!**

# உலக அரங்கில் — அங்கும் இங்கும் ★

உதயன்

## கியூபாவும் வியட்னுமும் சோவியத்காலனிகளே

### கஸ்ரோ மண் கவ்வினர்!

அண்மையில் ஹவானவில் நடந்து முடிந்த அணிசேரா நாடுகளின் ஆருவது உச்சி மாநாடு சோவியத்யூனினுக்கும் அதன் அடிவருடிகளான கியூபா, வியட்நாம் ஆகியவற்றுக்கும் பெரும் தோல்வியாகவே முடிந்தது. பொதுவாக மாநாட்டுக்கு உபயகாரராயுள்ள நாட்டிற்குச் சில சலுகைகளும் வாய்ப்புகளும் ஏற்படுவதுண்டு. அந்த வகையில் கியூபாவிற்குத் தலைமைப்பதவியும், விருந்தோம்பும் வாய்ப்பும் கிடைத்தும், அவை எதுவித பயனையும் அளிக்கவில்லை. அதற்குக் காரணம் கியூபாவின் அதீத அடிமை மனப்பான்மையும், அசட்டுத்தனமான பிடிவாதமுமேயாகும். இன்றைய உலகில் மூன்றுவது மண்டல நாடுகளுக்கு ஒரு பங்கும் பணியும் இருப்பதற்கு அடிப்படைக் காரணமே, மேலாதிக்க வல்லரசுகள் எதனுடனும் கூட்டுச் சேராமல், இராணுவ ஒப்பந்தங்களில் சேராமல், உண்மையான நடுநிலைமையையும் சுதந்திரத்தையும் கட்டிக்காக்க இந்நாடுகள் விரும்புவதாகும். ஆதாரமான இந்த அபிலாஷையை மதிக்காது, அணிசேரா இயக்கத்தை சோவியத் சமூக ஏகாதிபத்திபத்திற்கு ஆதரவாக இட்டுச் செல்ல கியூபாவும் வியட்நாமும் படாதபாடுகள் பட்டன. சோவியத்யூனியன் அணிசேரா இயக்கத்தின் 'இயல்பான நேசசக்தி' என்று வாய் ஓயாது கூறிக்கொள்ளும் கியூபா, அக்கருத்தையே உச்சிமாநாட்டின் அரசியல் அறிக்கையிலும் புகுத்தியது. ஆனல் பல சிறிய நாடுகள் இந்தச் சூழ்ச்சியை நன்கு கண்டுகொண்டு, அறிக்கையின் அந்தப் பகுதியை நிராகரித்து, மறுசீரமைக்கும்படி நிர்ப்பந்தித்தன. வாய்ச்சவடால் வீரரான கஸ்ட்ரோ தனது சாதுரியத்தை இத்துறையில் பயன்படுத்தியும் பயனளிக்கவில்லை. அணிசேரா இயக்கத்தின் நிறுவகங்களில் ஒருவரான மார்ஷல்டிட்டோ கியூபாவின் போக்கைத் தடுத்து நிறுத்தப் பெரு முயற்சிகள் மேற்கொண்டார்,

சோவியத் யூனியனுக்குப் பாத சேவை செய்வது போலவே, கம்பூச்சியா விவகாரத்திலும் கியூபா மண்கவ்வியுள்ளது. அணிசேரா இயக்கப் பணிமனை உறுப்பு நாடுகளின் முடிவிற்கு மாருக, கம்பூச்சிய பொம்மை அரசின் பிரதிநிதிகளைக் கியூபா மாநாட்டுக்கு அழைத்திருந்தது. எப்படியாவது வியட்நாமிய கூலியரசாங்கப் பிரதிநிதிகளுக்கு மாநாட்டில் ஆசனம் வழங்குவதற்கு கியூபா எவ்வளவோ முயன்றது. ஆயினும் அவ் விஷயத்திலும் தோல்வியே கண்டது. கம்பூச்சிய ஜனநாயக ஆட்சியின் பிரதிநிதிகளுக்கும் ஆசனம் வழங்கப்படவில்லை என்பது உண்மையே ஆயினும் இத்தனை நாடுகள் கம்பூச்சிய விவகாரத்திலே பெரும் அக்கறைகொண்டிருந்ததும், கியூபாவின் பாரபட்சமான செயலுக்கு முட்டுக்கட்டை போட்டதும் கவனிக்கத் தக்கதாகும். கம்பூச்சியாவில் வியட்நாம் ஆக்கிரமிப்புச் செய்து, பல்லாயிரக்கணக்கான படைகளை அந்நாட்டில் குவித்து வைத்தது. மிருகத்தனமான இராணுவ பலத்தினலேயே அந் நாட்டு மக்களை அடக்கி வைத்திருக்கிறது என்னும் உண்மை பரலாலும் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளமையாலேயே கியூபாவின் முயற்சி பலிக்கவில்லை. குறிப்பாக ஆசிய நாடுகள் விடாப்பிடியாக வியத்நாமின் செயலை உலக அரங்கிலேயே அம்பலப் படுத்தியிருக்கின்றன.

அணிசேரா நாடுகள் சிலவற்றின் பிரதிநிதிகள் அண்மைக்காலத்தில் அடிக்கடி சுட்டிக்காட்டியிருப்பது போல, உண்மையில் கியூபாவும் வியத்நாமும் அணிசேரா நாடுகள் என்றே கூற முடியாது. கியூபாவில் சோவியத் இராணுவம் நிலை கொண்டுள்ளது; பாதுகாப்பு ஒப்பந்தங்கள் இருநாடுகளுக்கு மிடையிலே இருக்கின்றன. வியத்நாம் இன்று நடைமுறையில், ஒரு சோவியத் காலனி என்றே கூறிவிடலாம். இந்நிலையில் இவை அணிசேரா இயக்கத்தில் இயங்குவதே பொருத்த மற்றது. ஏகாதிபத்திய பிடிகளிலிருந்து மெல்ல மெல்ல விடுபட்டு வந்த பாகிஸ்தான், ஈரான் முதலிய நாடுகள் எங்கே? சோஷலிச முலாம் பூசி, சோஷலிச முகாமில் இருப்பதாய்க் கூறிக்கொள்ளும் கியூபா, வியத்நாம் போன்ற நாடுகள் எங்கே? இந்த உண்மை உலகத்தால் உணரப்பட்டமையாலேயே ஹவான மகாநாட்டில் சோவியத் சூழ்ச்சிகள் முழுத் தோல்வியடைந்துள்ளன. ★

### நட்பா? சுரண்டலா?

உலகின் பல பகுதிகளிலே பெட்ரோல், பெட்ரோலியப் பொருட்கள் முதலியவற்றின் விலை ஏற்றங்களைப்பற்றுப் பலரும் பேசும் பொழுதும் எழுதும்பொழுதும் அராபிய நாடுகளைப் பற்றியும், அமெரிக்க இராட்சஸ கம்பெனிகளைப் பற்றியுமே குறிப்பிடுவது வழக்கம். மூன்ருவது உலக நாடுகளில் அமெரிக்கக் கம்பனிகள் பெரும் இலாபம் சம்பாதிக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மை. ஏகாதிபத்தியத்தின் இரும்புப்பிடி எத்துணை கோரத்தனமாக இருக்கின்றது என்பதை இது காட்டுது. ஆனல் அதே வேளையில் சோவியத் யூனியன் எண்ணெய் ஏற்றுமதியினுல் எத்தனை நாடுகளைச் சுரண்டுகிறது என்பதும், ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு அது எவ்விதத்திலும் சளைத்ததல்ல என்பதும் பலருக்குத் தோன்றுவதில்லை. ஆசிய நாடுகளில் இந்தியா சோவியத்யூனியனிடமிருந்து பெருமளவு மசகு எண்ணெயை இறக்குமதி செய்கிறது. சோவியத்யூனியனுக்குச் சாதகமாகவே உள்ள இந்திய — சோவியத் வர்த்தகத்தின் ஓர் அம்சமாக இந்தியா சோவியத் பெட்ரோலை இறக்குமதி செய்யவேண்டியுள்ளது. ஆயினும் சோவியத் எரிபொருள் இறக்குமதியால் இப்பொழுது அதிக கஷ்டத்தை அநுபவிக்கத் தொடங்கியுள்ள நாடுகள் கிழக்கு ஐரோப்பிய நாடுகளேயாகும். குறிப்பாக பல்கேரியா செக்கோசிலவைக்கியா, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, ஹங்கேரி, போலந்து ஆகிய ஐந்து நாடுகளும் எரிபொருள் நெருக்கடியை எதிர்நோக்குகின்றன. தமது எரிபொருள் தேவைகளுக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில், புதிய சக்தி மூலங்களைக் கண்டறிய வேண்டிய நிலையில் அவை உள்ளன. சோவியத்யூனியன் அந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துவந்த எரிபொருள் திடீரெனக் குறைந்துவிட்டது. இதற்கு முக்கிய காரணம் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு சோவியத்யூனியன் கணிசமான எண்ணெயை வெளிநாட்டுச்செலாவணிக்காக ஏற்றுமதி செய்யத் தொடங்கியதேயாகும். சோஷலிச நேச நாடுகளாயினும் சோவியத்யூனியனின் சுயநலமே முதல் கவனிக்கப் படும்.

### அண்ட வெளியிலும் போட்டி

அமெரிக்க ஜனதிபதி ஜிம்மி கார்ட்டரும் சோவியத் தலைவர் பிரெஷ்னெவும் வியன்னவில் கைச்சாத்திட்ட இரண்டாவது கேந்திர ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தம், ஆயுதக் குறைப்பிற்கும் சமாதான வளர்ச்சிக்கும்பதிலாக பலத்த போட்டா போட்டியையே உருவாக்கியிக்கிறதை முன்னர் இப் பகுதியிலே குறிப்பிட்டிருந்தோம். தரைப்படைகளையும் கடற்படைகளையும் இரு மேலாதிக்க வல்லரசுகளும் உஷார் நிலையில் வைப்பதும் சர்வ சாதாரணமாகியுள்ளது. அந்தப் போட்டி இப்பொழுது அண்ட வெளிக்கும் பரவியுள்ளது. செய்மதிகளை வானவெளிக்கு அனுப்புவதும் அவற்றை இராணுவ நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதும் இரு வல்லரசுகளினதும் இடைவிடாத முயற்சிகளாக இருந்து வந்திருக்கின்றன. விஞ்ஞான பரிசோதனைகளுக்காகவும், மனுக்குலத்தின நன்மைக்காகவும் அண்ட வெளி ஆராய்ச்சிகள் நடத்துவதாக இரு வல்லரசுகளும் பிரசாரம் செய்து வந்திருப்பினும், நடைமுறையில் இராணுவ நோக்கங்களே முக்கியத்துவம் பெற்றிருந்தன. 1957ல் சோவியத்யூனியனும், 1958ல் அமெரிக்காவும் முதலாவது செய்மதியை வானில் செல்ல விட்டகாலத்திலிருந்து 1977ம் வருட இறுதிவரை, ஏறத்தாழ இரண்டாயிரம் செய்மதிகள் வான்வெளியில் வலஞ் செய்து கொண்டிருந்தன. இவற்றில் பெரும்பாலானவை சோவியத்- அமெரிக்க கருவிகளே. அதுமட்டுமல்ல இவ் இரண்டாயிரத்தில், ஆயிரத்து ஐந்நூற்றுக்கும் மேற்பட்டவை இராணுவ தேவைகளை நிறைவேற்றுவனவாகவே அமைந்தன. சோவியத் யூனியன் 902 செய்மதிகளையும் அமெரிக்கா 613 செய்மதிகளையும் யுத்த சருவிகளாகவே அனுப்பின. ஒரு நாடு வான்வெளிக்கு அனுப்பி வைத்துள்ள செய்மதியை மற்ற நாடு அழித்து வீழ்த்துவதில் பல பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டு வந்துள்ளன. அதாவது உலகின் பரப்பை மேலாதிக்க வல்லரசுகள் கூறுபோட்டு தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க விரும்புவதைப் போலவே, அண்ட வெளியையும் தமது ஆளுகைக்குள் அடக்க இவை எத்தனிக்கின்றன. இது கால வரை செய்மதி உற்பத்தியிலும், பயன்பாட்டிலும் இரு தேசங்களுக்குமிடையிலே சமபலம் இருந்து வந்தது. ஆனல் மிகச் சமீபத்தில் சோவியத் யூனியனின் பலம் சற்று ஓங்கியிருப்பதால் அமெரிக்காவிலே சலசலப்பு ஏற்பட்டிருக்கிறது. சில காலத்திற்கு முன் இந்து சமுத்திரத்திலே பயிற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சோவியத் கடற்படையை வேவு பார்த்துக் கண்காணித்து செய்திகள் அனுப்பிக்கொண்டிருந்த அமெரிக்கசெய்மதி ஒன்றை, சோவியத் எதிர்ச் செய்மதி நிலை குலையச் செய்தது இது அமெரிக்க வட்டாரங்களில் அதிர்ச்சியை உண்டாக்கியுள்ளது. எனவே, கார்ட்டர், புதிய செய்மதி எதிர்ப்பு அமைப்பு ஒன்றுக்கு அனுமதி வழங்கியுள்ளார். இத்தகைய போட்டா போட்டி ஒரு நாளும் ஒழியப் போவதில்லை. தற்காலிக ''அமைதி'', அதாவது யுத்த மோதல் தவிர்ப்பு, ஏற்படக் கூடுமாயினும் நிரந்தர சமாதானம் நிலவப் போவதில்லை சம்பூர்ணமான ஆயுதப்பரிகரணம் உலகரீதியாக ஏற்பட்டாலன்றி வேறு வழியில்லை. அதனையே பல வருடங்களாக சீன வற்புறுத்தி வருகிறது. அமைதி வேண்டும் என்று உதட்டளவில்கூறிக்கொண்டு, அடுத்த உலக யுத்தத்திற்கு, அண்ட வெளியில் ஆயத்தம் செய்து வருகின்றன. அமெரிக்காவும் சோவியத்யூனியனும் இதுவே கேந்திர ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தத்தின் இலட்சணம்! ★

### கம்பூச்சியாவில் நச்சுப்புகை!

### கொடுமை!

இந்தோசீனத்தில் வியத்நாம் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கிய காலமுதல், அதாவது கம்பூச்சியாவிலும், லாவோசியாவிலும், சீனவின் எல்லைப்புறங்களிலும் இராணுவத் தாக்குதல்களை நடத்தத் தொடங்கிய நாள்முதல் ஒரு செய்தி அடிக்கடி வெளி வந்துகொண்டிருக்கிறது. அது தான், வியத்நாம் புதிய ரக நச்சுப் புகையையும், ஒருவிதமான கதிர் வீச்சையும பயன் படுத்துகிறது என்பதாகும். வியத்நாம் யுத்தத்தின்போது அமெரிக்க ஏகாதிபத்தியப் படைகளும் நச்சுத்திராவகக் குண்டுகளையும் பயிர் அழிப்பு விஷங்களையும் பெருமளவில் பயன்படுத்தின. அதுபற்றி அறிந்த உலக மக்கள் மகா பாதகமான அச்செயலைக் கண்டித்தனர். அமெரிக்கா பயன்படுத்திய நச்சுத்திராவகங்கள் தென்வியத்நாம் வீழ்ச்சியுற்றபொழுது வட வியத்நாமிய படைகள்வசம் சேர்ந்தன. அவற்றையும் வியத்நாமியர் இப்பொழுது கம்பூச்சியா, லாவோஸ் ஆகிய நாடுகளில் தேசபக்தப் படைகள் தங்கியிருக்கும் பிரதேசங்களை அழிப்பதற்குப் பிரயோகிக்கின்றனர். அது உலகறிந்த செய்தியே. ஆனல் மேற்கு நாடுகளைச் சேர்ந்த விஷயமறிந்த பத்திரிகை நிருபர்கள் இப்பொழுது தெரிவிக்கும் விசேட செய்தி என்னவென்ருல், வியத்நாமியர் சில பல புதிய திராவகங்களையும், யுத்த தளபாடங்களையும் பயன்படுத்துகின்றனர் என்பதாகும். வியத்நாமிய எல்லைப் பிரதேசங்களில் தற்பாதுகாப்பிற்காகச் சீனப்படைகள் பதிலடி கொடுக்க முற்பட்ட பொழுதும் இப்புதிய விஷக் கருவிகளை வியத்நாமியர் பரீட்சித்துப் பார்த்ததாகக் கூறப்படுகிறது. இவற்றையெல்லாம் கவனமாக அலசி ஆராய்ந்த மேற்கு நாடுகளின் நிருபர்கள் ஒரு முடிவிற்கு வந்துள்ளனர். வியத்நாமியர் மூலமாக சோவியத் இராணுவத்தினர் சில நவீன கருவிகளை தென்னுசிய மக்கள் மீது பரீட்சித்துப் பார்க்கின்றனர். இந்தோசீன விஷக் கருவிகளின் பரிசோதனைக் களமாக ஆக்கப்பட்டுள்ளதா?

இதில் அப்படியொன்றும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. இரண்டாவது உலக யுத்தத்திற்குச் சில வருடங்கள் முன்பதாக ஸ்பெயின் நாட்டில் உள்நாட்டு யுத்தம் நடைபெற்றபோது, எதிர்ப்புரட்சிப் படைகளுக்கு ஆதரவாயிருந்த நாஜி ஜெர்மானிய இராணுவத்தினர் தமது புதரக விமானங்களையும், ஏனைய தளபாடங்களையும் ஸ்பெயின் தேசத்துப் போரில் பரீட்சித்துப் பார்த்தனர். இத்தாலிய பாசிஸ்டு ஆட்சியினரும் ஸ்பானிய எதிர்ப்புரட்சி இராணுவத்தினருக்குப் பல புதிய நச்சுப் புகைக் குண்டுகளை வழங்கி பரிசோதனை செய்தனர், பின்னர் அதே குண்டுகளே அபிசீனியா என்று அக்காலத்தில் வழங்கிய (இன்றைய) எதியோப்பிய மக்கள் மீது மிருகத்தனமாகப் பயன் படுத்தப்பட்டது.

அண்மையில் ஜனநாயகக் கம்பூச்சியாவின் தகவல் பிரபிரசார அமைச்சு வெளியிட்ட ஒலிபரப்புச் செய்தியொன்றில், தற்சமயம் கம்பூச்சியாவில் வியத்நாம் பிரயோகித்துவரும் நச்சுத்திராவக வாயு மக்களைக் கொன்றெழிக்கிறது என்றும், உலக மக்கள் இம்மிருகத்தனமான அரக்கச் செயல்களை வன்மையாகக் கண்டித்துக் குரல் எழுப்பவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டது.

**தீர்க்கமான அம்சம் மக்களே! ஆயுதங்கள் இரண்டாம் பட்சமானவையேயாகும்!**

# சீன மக்கள் குடியரசின் 30-வது ஆண்டு நிறைவு

**1949ம்** வருடம் அக்டோபர் முதலாம் திகதி தலைவர் மாஓசேதுங் அவர்களால் சீன மக்கள் குடியரசு உலகிற்குப் பிரகடனப்படுத்தப்பட்டது. கடந்த முப்பது ஆண்டுகளில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் சீன மக்களும் சீன அரசும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும், பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தையும் ஸ்திரப்படுத்தி, சுயசார்பில் தங்கி நின்று தமது தலைவிதியைத் தாங்களே தீர்மானித்துக் கொள்ளும் ஒரு நிலைக்கு வந்துள்ளனர். உலகிலேயே அதிக சனத்தொகையைக் கொண்ட சீன தேசத்தை இந்த நூற்றாண்டு முடிவதற்குள் சக்தி மிக்க நவீன சோஷலிச நாடாக்கும் புதிய நீண்ட பயணத்தை சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் சீன மக்களும் சீன அரசும் ஆரம்பித்துள்ள இவ்வேளை முப்பதாவது ஆண்டு நிறைவு தினம் கொண்டாடப்படுகின்றது.



சீன மக்கள் பல நூறு ஆண்டுகளாக நிலப்பிரபுத்துவ அடிமைத்தனத்தின் கீழும் பின்பு ஏகாதிபத்தியத்தின் கோரப் பிடியின் கீழும், சிக்குண்டு சின்னாபின்னப்பட்டு அவல வாழ்க்கை வாழ்ந்த மக்களாவர். பொருளாதாரச் சுரண்டலும், அரசியல் அடக்கு முறையும் மட்டுமன்றி கொடிய நோய்களும், வறுமையும், பஞ்சமும், பசியும், இயற்கை அழிவுகளும் சீன மக்களை வாட்டி வதைத்தன. ''கிழக்கின் மோசமான நோயாளி'' என வர்ணிக்கப்பட்ட சீன மக்கள், நிலப்பிரபுத்துவத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிராக நூற்றுக்கணக்கான எழுச்சிகளில் ஈடுபட்ட போதிலும் அவற்றை ஒழிக்க முடியவில்லை. 1921ம் ஆண்டு யூலை முதலாம் திகதி தலைவர் மாசேதுங் உட்பட சீனாவில் அன்றிருந்த மாக்சிஸ்டுக்களின் முயற்சியினால் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. தலைவர் மாஓவை வழிகாட்டியாகக் கொண்ட சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் சீன மக்கள் சுமார் கால் நூற்றாண்டுக்கு மேல் நீடித்த போராட்டத்தின் மூலம் ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், அதிகார முதலாளித்துவம் ஆகிய மூப்பெரும் மலைகளைத் தகர்த்தெறிந்து தமது வெற்றியை நிலை நாட்டினர். மாக்சிசம் லெனினிசத்தை தமது நாட்டின் பிரத்தியேக நிலைமைக்கு ஏற்றவாறு நடைமுறைப்படுத்தும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ், ஐக்கிய முன்னணித் தந்திரோபாயத்தை முறையாகக் கடைப்பிடித்து, ஆயுதப் போராட்டத்தில் தங்கி நின்று, தோல்விகளையும் பின்னடைவுகளையும் தாண்டி இறுதி வெற்றியை சீன மக்கள் வென்றெடுத்தனர். மதிநுட்பம்

## பாட்டாளிவர்க்க சர்வாதிகாரமும் பாட்டாளிவர்க்க ஜனநாயகமும் சீனாவில் செழித்துவளர்கின்றன

வாய்ந்த மாபெரும் தலைவரான தோழர் மாசேதுங் அவர்களின் தலைமையைக் கொண்ட சீனக் கம்யூனிஸ்ட் கட்சி சீன மக்களையும் சீன தேசத்தையும் மீட்டெடுக்கும் புனிதப் போராட்டத்தின் முன்னணியில் நின்றது ஒரு பெரும் சரித்திர சம்பமாகும். லட்சக்கணக்கான சீனமக்களினதும், சீனத் தேசபக்தர்களினதும் உயிர்த்தியாகத்தாலும், உதிரத்தாலும் 1949ம் ஆண்டு அக்டோபர் முதலாம் திகதி சீன மக்கள் குடியரசு உலகின் முன் உதயமாகியது.

சீன மக்கள் தமது நீண்ட கொடுமை நிறைந்த வாழ்க்கைக்கு முடிவு கட்ட எந்தக் கட்சியினதும் எந்தத் தலைவரினதும் வழிகாட்டலில் நடந்து சென்று விடுதலையைத் தேடிக் கொண்டார்களோ அதே கட்சியினதும் அதே தலைவரினதும் தலைமையின் கீழ் கடந்த முப்பது ஆண்டுகளில் வழி நடந்து சீன தேசத்தை உலகின் முன் தலைநிமிர்ந்து நிற்கும் ஒரு நாடாக மாற்றியுள்ளனர். இங்கே தான் மாக்9சம்- லெனினிசம்- மாசேதுங் சிந்தனை என்ற தத்துவத்தின் உண்மை பற்றி, அதை நடைமுறைப்படுத்திய ஒரு கட்சியின் திறமை பற்றி, அக்கட்சிக்கு தலைமை கொடுத்த ஒரு தலைவனின் மதிநுட்பம்பற்றி, எல்லாவற்றிக்கும் மேலாக சரியான தத்துவத்தின் கீழ் வழி நடத்தப்பட்ட மக்களின் சக்திக்கு இருக்கின்ற வலிமை பற்றி ஒரு பெரும் உண்மைக் காவியம் உருவாகி இருப்பதை நம் கண் முன்னே காணுகின்றோம்.

சீன மக்கள் விடுதலைக்குப் பின் கடந்த முப்பது ஆண்டுகளில் தமது சோஷலிச நிர்மாணத்திலும், சோஷலிசப் புரட்சியிலும் பல்வேறு வடிவங்களில் உருப்பெற்ற உள்நாட்டு -வெளிநாட்டு பிற்போக்கு சக்திகளை முறியடித்து வந்துள்ளனர். ஒவ்வொரு இக்கட்டான கால கட்டத்திலும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் சீன மக்கள் சகல இடர்களையும் வெற்றி கொண்டு தமது சோஷலிசப் பாதையில் வெற்றி மேல் வெற்றி பெற்று வருகின்றனர். இன்று தலைவர் மாஓவிற்குப் பின் தலைவர் குவாஹோபெங் அவர்களைத் தலைவராகக் கொண்ட கட்சியின் மத்திய கமிட்டித் தலைமையின் கீழ் சீன மக்கள் தமது சோஷலிச நிர்மாணத்தின் புதிய கால கட்டத்திற்குள் பிரவேசித்துள்ளார்கள். நான்கு துறைகளிலான சோஷலிச நவீனமயத்தின் மூலம் கிட்டத்தட்ட தொண்ணூறு கோடி மக்கள் சனத்தொகையை எட்டியுள்ள சீன மக்கள் இந்த நூற்றாண்டு முடிவிற்குள் உலகின் முன்னிலையில் ஒரு சக்தி மிக்க நவீன சோஷலிச சீனாவை நிலை நிறுத்தும் இலக்கில் காலடி எடுத்து வைத்துள்ளனர். மாசேதுங் சிந்தனை காட்டும் சரியான பாதையில் மகத்தான சீனக்

(பக்கம் IV பார்க்க)



## சீனாவின் நவீனமயத்திட்டம் சோஷலிச நவீனமயமே!

**மா**பெரும் சீன மக்களும் சீன அரசும் மகத்தான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் ஒரு புதிய நீண்ட பயணத்தை ஆரம்பித்துள்ளனர். இப்பயணமானது இந்த நூற்றாண்டின் முடிவிற்குள் சீன தேசத்தை சக்தி மிக்க நவீன சோஷலிசக் குடியரசாக மாற்றும் இலக்கை நோக்கி முன்னேறுவதாகும். சீனதேசத்தை விவசாயம், கைத்தொழில், தேசிய பாதுகாப்பு, விஞ்ஞானம்-தொழில்நுட்பம் ஆகிய நான்கு துறைகளில் நவீன மயப்படுத்தி நாட்டின் சகல செல்வங்களை வளப்படுத்துவதாகும். சீன மக்கள் முன் உள்ள தற்போதைய இப்பிரதான கடமையை நிறைவேற்றுவதில் முழுநாட்டிற்கும் தலைமை தாங்கும் பொறுப்பு சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினுடையது என்பதை பதினோராவது மத்திய கமிட்டியின் மூன்றாவது விரிவுபடுத்தப்பட்ட கூட்டம் தெளிவாக்கியுள்ளது. இப்பாரிய பொறுப்புக்களை மேற்கொள்வதென்பது மாக்சிசத்தின் சாராம்சத்தை உணர்ந்து செயல்படுவதென்பதாகும். அதாவது மாசேதுங் சிந்தனையைப் புரிந்துகொண்டு செயல்படுவதாகும். நாட்டில் சிறுதொகையான எதிர்ப்புரட்சி சக்திகளும், குற்றச் செயல் புரிவோரும் இருக்கின்றனர். அவர்களுக்கு எதிராக வர்க்கப் போராட்டத்தை எவ்வகையிலும் தளர்த்தக் கூடாது எனவும், எந்த வகையிலும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை பலவீனப்படுத்தவும் கூடாது எனவும் மேற்படி கூட்டத்தின்பின் வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கடந்த முப்பது ஆண்டுகளில் சீனமக்களும், சீன அரசும், சீனக்கட்சியும் பெற்ற பல்முனை அனுபவங்களைக் கொண்டே தற்போதைய சோஷலிச நவீன மயத் திட்டம் நடைமுறைப்படுத்தப் படுகின்றது. ஏகாதிபத்திய நாடுகளில் -- நவீனமயம் என்பது ஏகாதிபத்திய நவீனமயமாகவும், சமூக ஏகாதிபத்திய

(பக்கம் IV பார்க்க)

# பணவீக்கமில்லாத மக்கள்சீனம்

உலக பொருளாதாரங்கள் அனைத்திலும் தொடர்ச்சியாகவே இருந்து வருகின்ற பிரச்சனை-அந்நாடுகளின் சராசரி விலைமட்டத்தில் ஏற்பட்டு வரும் தொடர்ச்சியான அதிகரிப்பு ஆகும். விலைமட்டங்கள் உயர்வதை ஒட்டி மக்களின் வாழ்க்கைச் செலவு உயர்வதால் ஏற்படும் வாழ்க்கைத் தரத்தின் பாதிப்பை எவ்வாறு தவிர்க்கலாம் என்பதே அரசாங்கங்களின் முதல் முயற்சியாக இருந்து வருகின்றது. சோசலிச தன்மைகளையும் சேர்த்துக் கொள்வதாக முழக்கமிடும் வறிய கலப்புப் பொருளாதாரங்களில் நிலையற்ற ஒரு தன்மையை அளித்து அபிவிருத்திக்குரிய வேகத்தை சீர்குலைப்பதாகவும் கூட அதுவே காணப்படுகின்றது.

பணப்பொருளாதாரங்கள் என்ற முறையில் விலைமட்ட உயர்ச்சி தவிர்க்கமுடியாததாகவே பொருளியலாளர் விளக்கம் அளிப்பர். சமஉடமைப் பொருளாதாரத் தன்மையுடனும், உலகில் மிகக் கூடுதலான 88 கோடி மக்களின் வாழ்க்கைத்தரத்தை சமனான முறையில் பாதுகாத்துக் கொண்டு விளங்கும் மக்கள் சீனக் குடியரசு பணவீக்கப் பாதிப்பிலிருந்து தன்னைக் காப்பாற்றி, ஏனைய நாடுகளுக்கு முன்மாதிரியாக விளங்குவது கவனிக்கத்தக்கதாகும்.

பணவீக்கம் என்பது பொருளாதார அபிவிருத்தியாளரைப் பொறுத்தவரை அவசியமானதாக, முதலாளித்துவப் பொருளாதாரம் கருதும். மறுபுறத்தில் மக்கள் வாழ்க்கைத் தரத்தை எச்சரிக்கை செய்வதாகவும் காணப்படுகின்றது. முதலாளித்துவ நாடுகளில் தனியார் ஊக்கம் தூண்டப்படுவதற்கான வாய்ப்புக்களை அனுமதிப்பதும், தூண்டுவதுமே அந்நாடுகளில் உற்பத்திப் பெருக்கத்திற்கு அவசியமெனப்படுகின்றது. அந்த ஊக்கம் அரசாங்கத் தலையீடுகள் எதுவுமே இல்லாத பொருளாதாரங்களில் முற்றுமுழுதாக இலாபத்தினாலும், இலாபத்தைக் காட்டும் விலையினாலும் ஏற்படுவதாகும். அவ்வாறு கணிசமான இலாபம் தரும் நிலையில்தான் பொருளாதாரம் வளர்ச்சியடையும் என்கின்றனர். பொதுவாக 160% — 200% வரையிலாவது விலை மட்ட உயர்வு அவற்றிற்கு அவசியமென்பர். இந்த ஆய்வுஅணுகு முறையில் பணவீக்கம், அபிவிருத்தி தேவையாக கருதிக் கொள்கின்றனர், இதனால் பணவீக்கத்தை வளரவிடுவதில் முதலாளித்துவ அரசாங்கங்களுக்கு உடன்பாடு ஏற்பட்டு வளர்ந்துள்ளது. விலை உயர்வு, இலாப அதிகரிப்பு, தனியார் ஊக்கம் உயர்தல், தனியார் முதலீடுகள் அதிகரிப்பு, உற்பத்தி அதிகரிப்பு என்பன ஏற்படும். இதனால் பின்னர் விலைகள் குறையக் கூடும். பணவீக்கம் தானாகவே பணவீக்கத்தைக் குறைக்கும் என்ற விளக்கத்தினையும் தரமுடியும்.

## பணவீக்கமும், தொழில் வாய்ப்பும்

நாட்டில் மக்களுக்கு வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கங்களின் நன்கொடைக் கொள்கைகள், வரவு செலவுத்திட்ட மானியக் கொள்கைகள் மட்டும் பயன்தரமாட்டா. அப்படித் தரும் கொள்கையை ஒரு நாடு தொடர்ந்து கையாளவும் முடியாது. வாழ்க்கைத் தரமானது பொருளாதார அபிவிருத்திப் போக்குடன் இணைக்கப்படவேண்டும். அப்போதே அபிவிருத்தியினைத் தூண்டும்போது அத்துடன் வாழ்க்கைத்தர உயர்வும் தானாகவே ஏற்பட்டுச் செல்லும். அது நிலைத்து உயரவும் முடியும். இதனால் அபிவிருத்தி, மக்கள் வருமானத்தை உயர்த்தக் கூடிய பயன்படுதொழில் வாய்ப்புடன் சேர்த்துவிடப்படல் வேண்டும். இந்த முறையில்தான தொழில் வாய்ப்பு வாழ்க்கைத் தரத்தை நிர்ணயிக்கும். நேரடியான முக்கியமான அம்சமாகும். வேலையின்மை பெரு

## திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியால் வாழ்க்கைச் செலவு குறைகின்றது! வாழ்க்கைத் தரம் கூடுகின்றது!

குதல் ஒருநாட்டு மக்கள் வாழ்க்கைத்தரத்தை-பொருளாதார நலன்களை உடனடியாகவே பாதித்து விடுவதாகும். இதனால் தொழில் வாய்ப்பை வழங்குதல், பணவீக்கத்துடன் எதிரான தொடர்பையே கொண்டுள்ளது. பணவீக்கம், விலைஉயர்வு இல்லாமல் போனால் தொழில்வாய்ப்பு அதிகரிக்க முடியாதென கோட்பாட்டு விளக்கம் அளிக்கின்றது. அல்லது அவ்வாறு தொழில்படையின் அனுமதியை முதலாளிகளின் இலாப உயர்வுக்கு அனுசரணையாகக் கேட்டும் முதலாளித்துவ பொருளியல் கோட்பாடு உருவாக்கப்பட்டு நியாயப்படுத்தப்படுகின்றது, மக்கள் நிறை தொழில் பெறுவதற்கு பணவீக்கம் அவசியமெனப்படுகின்றது..

மக்கள் சீனத்தில் வேலையின்மை அகற்றப்படும் முயற்சி வெற்றியளித்துள்ள அதே காலகட்டத்தில், பணவீக்க நிலையும் அகற்றப்பட்டுள்ளது. மத்திய திட்டமிட்ட பொருளாதாரத் தன்மையில், பணவீக்கம் இல்லாததினால் மக்கள் வாழ்க்கைச் செலவைக் குறைத்து, வாழ்க்கைத் தராதரத்தை உயர்த்த முடிகின்றது. அத்துடன் போதியளவு தொழில் வாய்ப்பையும் பெற்று வருவாய்களையும் உழைத்துக் கொள்கின்றனர். தொழில் வாய்ப்புக்களை வழங்கி, வருமானங்களை கொடுத்து, வாங்கிக்கொள்ளக்கூடிய பண்டங்களின் அளவுகளையும் அதிகமாக்கிக் கொண்டு செல்வது மக்கள் சீனத்தின் மகத்தான பணியாகும். இதைத்தானே மக்கள் வேண்டுகின்றனர். அரசும் செய்கின்றது. இதற்குப் பெயர் ஜனநாயகம் என்றால் பொருந்துமல்லவா? முதலாளித்துவத்தில் மாத்திரம் பணவீக்கமும் தொழில் வாய்ப்புப் பெருக்கமும் இணைய முடியாமற் போவது ஏன்? இரண்டையும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த ஏன்

**மா. சின்னத்தம்பி** B. A; B. Phil

பயன்படுத்த மறுக்கின்றனர்? இதுவே தலையெடுத்திருக்கும் பெரிய கேள்விகளாகும். அது மட்டுமல்ல தீவிர பணவீக்க நிலைமைகளை பெற்ற பின்னும் கூட முதலாளித்துவத்திலும் அதன் அடிப்படைகளை வலுவாக உருவாக்கி இருக்கும் கலப்புப் பொருளாதாரத்திலும் கூட ஏன் வேலையின்மையை முற்றாகத் தீர்க்க முடியாமற் போயிற்று?

சமவுடமைப் பொருளாதாரத்தில் மக்கள் நலன்களை அதிகரிக்க-தேவைகளை மதிப்பிட்டு அதன்படி உற்பத்தி, தொழில் வாய்ப்பு என்பனவற்றை திட்டமிடுகின்றனர். தனிநபர் இல்லாததால் காரணிகள் ''அமைப்பு'' என்பது அரசிடம் போய்விடுகின்றது. இதனால் பொருளாதாரங்களில் முழுமையாக மிகச் சிறு பகுதியினராக இருக்கும், தனியார் ஏற்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்கின்றது. முதலாளித்துவத்தில் நிர்வாகத்திற்காகவும், அரசாங்கம் தனியாக இருந்தும், மற்றொரு சிறு பகுதியினரிடம் முயற்சி அல்லது அமைப்பு என்ற காரணி விடப்பட்டுள்ளது. இதனால் சமூகச் செலவு அதிகமாகும். அவர்களுக்கு குவிய வேண்டிய இலாபத்தை அனுமதிக்க வேண்டியுள்ளது. சமவுடமையில் அந்த இலாபம் தேவையற்றதாகின்றது. அரசாங்கமே நிர்வாகத்துடன் அதையும் செய்து கொள்கின்றது. இதனால் இலாபமாக மாறவேண்டிய-உற்பத்தியின் மேலதிகப் பெறுமதி-கால் மாக்ஸ் கூறுகின்ற தொழிலாளர் சுரண்டல்-இல்லாமற் போகின்றது. தொழிலாளரே தமக்குரியதை-தமது உற்பத்தியின் பெறுமானம் முழுவதையும் பெற்றுக்கொள்ளுகின்றனர். அத்துடன் முதலாளித்துவத்தில் நிலம் என்ற காரணியும் தனியாரிடம் குவிந்துள்ளது. நிலச் சுவாந்தர்கள் தமது தேவைக்குரியதை கட்டாயம் உற்பத்தி செய்து கொள்கின்றனர். மிகுதி நிலத்தைப் பாவனைக்கு விடும்போது இலாபத்தை உச்சப்படுத்தக் கூடிய வீத வாடகை அறவிடுகின்றன. இந்த வாடகை வருவாய்கள் தனியாரிடம் குவிந்து விடும் போது அது தொழில் வாய்ப்பை விரிவுபடுத்தும் முதலீடாக அல்லாது, ஆடம்பர உற்பத்திக்கான கேள்வியை மாத்திரம் ஏற்படுத்திச் செல்கின்றது. சீனாவில் காரணிகள் அரசுடமையாயிருக்கும் போது வாடகை என்ற உழைப்பு சமூகத்திலிருந்து திரட்டப்பட்டு ஒதுங்க முடியாது, இதனாலும் சமுதாய நிதியை தொழில்வாய்ப்பு பெருக்கப் பயன்படுத்த முடிகின்றது. வாடகை இல்லாததால் விவசாயப்பண்ட விலைகளை குறைந்தளவில் வைத்திருக்க முடிகின்றது. தானிய விலைகளை பெருமளவு உயராமல் வைத்திருக்க முடியும். இதனால் கூலிப் பண்டங்களில் தொழிலாளர் நுகர்வுப்பண்டங்களில் - அடிப்படையான விவசாயப் பொருட்களின் விலைகளைக் குறைக்க முடிகின்றது. இதனால் பணவீக்கப் போக்கைத் தவிர்க்கவும் முடிகின்றது.

### சீனாவில் விலைத் தளம்பல்கள் இல்லை

வறிய நாடுகள் முதலாளித்துவ நாடுகளிலிருந்து உதவி கேட்கும்போது-அவை நேரடியாக அரசாங்கங்களினால் அல்லது அவை தலைமை பெற்றிருக்கும்-சர்வதேச நிறுவனங்கள் மூலமாக கடன் வழங்குகின்றன. அக்கடன்களைப் பெறும்போது நாடுகள் பெறுவதற்கான ஆலோசனையும் பெறுகின்றன. அவர்கள் நாணய மதிப்பிறக்கத்தைச் சிபாரிசு செய்கின்றனர். இதனால் அந்நாடுகள் மலிவான விலையில் வறிய நாடுகளின் உற்பத்தியை வாங்கிக் கொள்கின்றனர். அத்துடன் வேண்டுமென்றே வறியநாடுகளை சுரண்டுவதற்கு, தாம் அனுப்பும் பொருட்களின் விலைகளை கூட்டிவருகின்றன. இதனால் பலநாட்டுச் செலாவணிகள் சீனாவில் சுழல்வதைத் தடுக்க மே 28, 1949லிருந்து சீனா ''ரெண்மின்-பி'' யை தேசிய நாணயமாக பிரகடனப்படுத்தியது. 1951ல் நாணயக்குழப்பங்கள் தவிர்க்கபட்டு தேசிய செலவாணி நிலை நிறுத்தப்பட்டது. ஒருமுகப்படுத்தப்பட்ட நாணய வழங்கல் முறையினால் தேசியச் சந்தையில் பண நிரம்பல் ஒழுங்குபடுத்தப்பட்டு, பணப் பெறுமதி வலியுறுத்தப்பட்டுள்ளது. செலவாணிக் கட்டுப்பாடுகளும் கொண்டு வரப்பட்டன. மேற்கத்திய நாடுகளின் செலவாணிகள் பொருளாதாரத்தில் தடையற்றதாகக் குவியும் போது அந்தந்த நாடுகளின் பொருளாதார நெருக்கடிகளை அவர்கள் செலவாணி பெறும் நாடுகளுக்கு கைமாற்றினர். 1935- 1937 காலப்பகுதியில் அமெரிக்கா, பிரித்தானியா என்பனவற்றின் விலைத்தளம்பல்கள் சீனாவில் பண வீக்கத்தைத் தூண்டுகின்றது. பிரித்தானிய விலைக் குறிகாட்டி 22% ல் உயர்ந்த போது சீனாவின் விலைகள் 34% ல் உயர்ந்திருந்தன. இந்தப் போக்கு தற்போது வறியநாடுகளில் தெளிவாகவும், பலமாகவும் காணப்படுகின்றது. சீனா மே 28, 1949 சங்காய் விடுதலையுடன் இப் போக்கை தடை செய்து விட்டதாலும் பணவீக்கத்தில் இருந்து தப்பித்துள்ளது.

வறியநாடுகளில் கலப்புப் பொருளாதாரத் தன்மை இருப்பதால் பரிமாற்று விகிதங்கள் விலைப் போக்கிற்கு ஏற்பட வர்த்தகக் கம்பனிகள் செல்வாக்குகளிற்கு ஏற்ப மாற்றமடைந்துள்ளன இவை பண அமைப்புக குறைந்து வீக்கத்தைப் பரவி விட்டன. சீனாவில் தானாகவே சுயமாக பரிமாற்றுவிகிதத்தை தீர்மானித்து அரசாங்கம் அதனைத் தனது பிடியில் கொண்டுள்ளது. ஒருமுகப்படுத்தப்பட்ட நாணய நிதிக் கொள்கைகளினால் பண அமைப்பை சீனா காப்பாற்ற முடிவதால் பணவீக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. பண நிரம்பல் மிகையாக இருக்கும் போது சந்தையில் பொருள் குவிக்கக் கூடியதாக, அரசாங்கம் இருப்புக்களை பராமரித்து விழிப்புடன் இருப்பதுமே வீக்கம் தவிர்க்கப்பட்டுள்ளது.

முடிவாக மக்கள் சீனத்தில் பண நிரம்பலிலும், அரசு தன் திட்டமிட்ட ஒருமுகப்பட்ட கொள்கையை கையாளுவதோடு- தனது திட்டமிட்ட உற்பத்தி முறையினால் பொருள் நிரம்பலையும் தானே செய்து கொள்வதால்- மிகைக் கேள்வி எனப்படும் பற்றாக் குறை ஏற்படுவதேயில்லை. விலைகளும் உயர்வதில்லை ஆனால் உலகில் மீதி நாடுகளாகிய முதலாளித்துவம், கலப்புப் பொருளாதாரங்களும் அரசாங்கம் பண நிரம்பலில் மிகுந்த கவனம் செலுத்த முனைகின்ற போதும் உற்பத்திப் போக்கும் பொருள் நிரம்பலும் தனியார் கையிலிருந்து வருவதால்அவர்கள்செயற்கை இலாப நோக்குடன் நடைமுறைகளை மாற்ற வேண்டும் என்றே பொருட் பற்றாக் குறையை ஏற்படுத்தியும் வருவதால் பணவீக்கம் தொடர்ந்தே செல்லும். சீனாபொருள் நிரம்பலில் உறுதியும், பண நிரம்பலில் கட்டுப்பாடும் கொண்டிருப்பதோடு இரண்டையும் ஒருங்கிணைத்து, அரச கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாலும், சீர்மிகு திட்டமிடலை கொண்டிருப்பதாலும் 88 கோடிமக்களை பணவீக்கத்தின் பயங்கர கெடுபிடிகளிலிருந்து காப்பாற்றி வருகின்றது.

# சீனாவில் வரலாற்று ஆராய்ச்சி

## வர்க்கப்போராட்டங்களை எடுத்துக்காட்டுகின்றது

பேராசிரியர் க. கைலாசபதி

மக்கள் சீனத்திலே பிரயாணஞ் செய்யும் வெளிநாட்டுக் கல்வியாளருக்கு-குறிப்பாக வரலாற்றுத்துறையில் ஈடுபாடுடையோருக்கு - உவகையளிக்கும் அம்சங்களில் ஒன்று சீன வரலாற்று ஆய்வுகளிலும், உலக வரலாற்று ஆராய்ச்சிகளிலும் அந்நாட்டு சமூக விஞ்ஞானிகள் எடுத்து வரும் பெருமுயற்சியாகும். சென்ற வருடம் மக்கள்சீனத்திலே ஒரு மாதகாலம் சுற்றுலா மேற்கொண்டபொழுது நான் மிகுந்த அக்கறையுடனும், ஆர்வத்துடனும் அவதானித்த அம்சங்களில் இதுவும் ஒன்று.

ஒரு விஷயத்தை மாத்திரம் இச்சிறு கட்டுரையிலே குறிப்பிடலாம் என்று எண்ணுகிறேன். சீனாவின் பல பகுதிகளுக்கும் விஜயஞ் செய்தபொழுது அடிக்கடி நான் கவனிக்கக் கூடியதாய் இருந்தது, அங்கெல்லாம் நடைபெற்றுவரும் அகழ்வாராய்ச்சிகள். உலகின் மிகப் பழமையான நாகரிகச் செல்வத்தை உடைய நாடுகளில் ஒன்று சீனா. இந்திய, சுமேரிய, கிரேக்க, எகிப்திய நாகரிகங்களே சீன நாகரிகத்தை ஒத்த பழமையும், தொடர்ச்சியும் உடையன. அந்த வகையில் நீண்ட வரலாற்றைப் பெற்றுள்ள சீன நாகரிகமும், கலாசாரமும் அந்நாட்டின் பல்வேறு தேசிய இனங்களினாலும் உருவாக்கப்பட்டவை. ஏறத்தாழ ஐயாயிரம் வருடகாலத்து நாகரிக வளர்ச்சி நாட்டின் பல பகுதிகளில் தோன்றி வளர்ந்து வந்துள்ளது. கடைசியாக அரசாட்சி செய்த சிங் வமிசத்து அழிபாடுகள் வரை ஐயாயிரம் வருட வளர்ச்சியை ஆயிரக்கணக்கான அகழ்வாய்வுகள் மூலம் நாம் அறியக் கூடியதாய் உள்ளது. விஞ்ஞான பூர்வமான வரலாற்று ஆய்வின் பயனாகவே மனித சமுதாயத்தின் வளர்ச்சிப்படிகளை நாம் ஒருவாறு கிரகித்துக் கொள்ளலாம். பழமையின் ஒளியிலும், விளக்கத்துடனுமே நிகழ்காலம் எதிர்காலத்தை நோக்கி முன்னேறுதல் முடியும். எனவேதான் சீன அரசும், உயர்கல்வி நிலையங்களும், ஆராய்ச்சி மன்றங்களும் வரலாற்று ஆய்வுக்கு உரிய-முக்கியமான இடத்தை அளித்து வந்திருக்கின்றன. ''கடந்தகாலம் நிகழ்காலத்துக்குச் சேவை செய்யவேண்டும்'' என்பது தலைவர் மாஓசேதுங் கூறிய அறிவுரைகளில் ஒன்றாகும்.

மக்கள் சீனக் குடியரசு நிறுவப்பட்ட காலத்திலிருந்து பலதரப்பட்ட அபிவிருத்திப் பிரச்சினைகளுக்குள்ளும், வரலாற்றாய்விற்கு இன்றியமையாத அகழ்வாய்வுகளை சீன விஞ்ஞானிகள் மேற்கொண்டு வந்திருக்கின்றனர். இன்னொரு வகையில் பார்க்கப் போனால், அபிவிருத்தி வேலைகளுக்கும், அகழ்வாய்வுகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஏனெனில் வெவ்வேறு பகுதிகளிலே விவசாயத்தின் பொருட்டும், கட்டிட நிருமாணத்திற்காகவும், சுரங்க அமைப்பிற்காகவும், வேறு தேவைகளுக்காகவும் நிலத்தை அகழ்கையிலே தற்செயலாகச் சில சான்றுகள் அகப்படுகின்றன. அவற்றை ஆதாரமாகக் கொண்டு முறையாக அகழ்வாராய்ச்சி செய்து பழம் பொருட் செல்வங்கள் பலவற்றைக் கண்டெடுக்கின்றனர். உதாரணமாக 1956-ம் வருடம் பெரிய மதில் ஒன்றைப் பழுதுபார்க்கையில் தற்செயலாக பட்டயம் ஒன்று தென்பட்டது. அதிலே மிங் வம்சத்துப் பேரரசன் ஒருவனுடைய கல்லறை பற்றிய விவரங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அவ்விவரங்களை ஆதாரமாகக் கொண்ட ஆய்வின் விளைவாகவே பிரசித்தி பெற்ற மிங் கல்லறைகள் கண்டறியப்பட்டன. பீக்கிங் நகருக்கு அண்மையிலுள்ள இக்கல்லறைகள் சக்கரவர்த்திகளின் ஆட்சியில் ஏழை விவசாயிகளும் அடிமைகளும் அனுபவித்த இன்னல்களையும சொல்லொணாத் துன்பங்களையும் துலக்கிக் காட்டுகின்றன. இப்பொழுது சிறு கண்காட்சி

### கடந்தகாலம் நிகழ்காலத்திற்கு சேவைசெய்யவேண்டும்

சாலையாகவும் அமைந்துள்ள ஒரு கல்லறைக்கு நான் விஜயஞ் செய்தபோது பல தகவல்களை அறிய முடிந்தது. உதாரணமாக கல்லறை கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட கல், மண், பளிங்கு, சுண்ணாம்பு, மரம், இரும்பு முதலிய பொருள்களின் விவரங்களும், கட்டிட வேலையிலே கட்டாயமாக ஈடுபடுத்தப்பட்ட ஏழை மக்களின் எண்ணிக்கை, அவலநிலை என்பன பற்றிய செய்திகளும், கல்லறை நிர்மாணிக்கப்பட்ட காலத்தில் இறந்தோர் தொகை, மொத்தச் செலவு முதலியன பற்றிய தகவல்களும் புள்ளிவிபரங்களாக வரைபடங்களில் சித்திரிக்கப்பட்டுக் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. வரலாற்றின் அடிப்படையான வர்க்கப் போராட்டம் நுணுக்கமாகச் சித்திரிக்கப்பட்டிருப்பதை அவதானிக்க முடிந்தது. கல்லறை கட்டப்பட்ட காலப் பகுதியிலே வட சீனாவில் நிலவிய கொடிய பஞ்சத்தினால் நலிந்து மடிந்த மக்களின் நிலைமையைச் சித்தரிக்கும் நவீன ஓவியங்களும் அங்கு மாட்டப்பட்டிருந்தன. இவற்றைப் பார்க்கும் ஒருவர் காலங்காலமாக சீனாவிலே வெடித்து வந்த விவசாயிகள் போராட்டங்களைப் பற்றி எண்ணிப் பார்க்காமல் இருக்கஇயலாது.

பொதுவில், கனிப்பொருள்களுக்காகச் சுரங்கங்கள் தோண்டும் பொழுதும், கால்வாய்கள் வெட்டும்பொழுதும், நீர்த்தேக்கங்கள் அமைக்கும் பொழுதும், உயரமான புதிய பலமாடிக் கட்டிடங்களுக்கு அத்திவாரம் போடுவதற்கு நிலத்தை வெட்டும்பொழுதும், அகழ்வாராய்ச்சிக்கு வாய்ப்பு உண்டாகிறது. உதாரணமாக, பீக்கிங் நகருக்குச் சமீபத்தில் நான் சென்று பார்த்த மிங் சக்கரவர்த்தியின் கல்லறைக்குப் போகும் வழியில் மிங் கல்லறை நீர்த்தேக்கம் இருக்கிறது. நீர்த்தேக்கம் அமைக்கப்படுமுன் அவ்விடத்தில் அகழ்வாய்வுப் பரிசோதனைகள் நடைபெற்றன. 1958- ஆம் ஆண்டு கோடைகாலத்தில் அவ்விடத்திலே நீர்த்தேக்க நிர்மாண வேலைகள் நடந்தன. ஏறத்தாழ ஒரு இலட்சம் மக்கள் சிரமதான அடிப்படையில் அங்கு பணி புரிந்தனர். சீனப் புரட்சியின் முப்பெரும் தலைவர்களும், மறைந்த பெருமதிப்புக்குரியவர்களான, மாஓ, சூ-டே, சூஎன்-லாய் ஆகியோர் ஏனைய தொண்டர்களுடன் நிர்மாண வேலையிற் பங்குபற்றினர். சூஎன்-லாய் ஒருவார காலம் அங்கு தங்கி மண் சுமந்தும், கல் தூக்கியும், வண்டி இழுத்தும் தொழிலாளரோடு தொழிலாளராக உழைத்தார். தலைவர்கள் ஆர்வத்துடன் உழைப்பதாலும் அகழ்வாராய்ச்சித் தலங்கள் சிறப்பிடம் பெறுகின்றன.

பீக்கிங் நகரிலிருந்து பின்னர் வரலாற்றுப் பெருமை வாய்ந்த சியான், தயியுவான் முதலிய நகரங்களுக்குப் போன வேளையிலும் அகழ்வாராய்ச்சி நடைபெற்ற, நடைபெற்றுக் கொண்டிருந்த தலங்களைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவற்றையெல்லாம் பார்த்த பின் ஒரு எண்ணம் என் மனதில் எழுந்தது; நான் அறிந்த மட்டில் இன்று உலகிலே வேறெந்த ஒரு நாட்டிலும் நடைபெறாத அளவில் அகழ்வாராய்ச்சி சீனாவில் வீறார்ந்த முறையில் நடைபெறுகிறது. புரட்சியின் பயனாக

### சீனாவில் அகழ்வாராய்வின் நோக்கம் - இனவாதத்தை வளர்ப்பதல்ல; சமூக விஞ்ஞானத்தை வளர்ப்பதற்கே!

நிகழ்ந்த விடுதலைக்குப் பின் நாட்டில் ஏற்பட்ட கல்வி, கலாசார மறுமலர்ச்சியின் ஓர் அம்சமாக இது உருவாகி வந்து, கலாசாரப் புரட்சிக் காலத்தில் புதிய வேகம் பெற்று, இப்பொழுது ஆக்கபூர்வமான வழிகளில் கிளைவிட்டு வளர்ந்து வருகிறது.

புராதன நாகரிகத்தின் சான்றுகளும் சின்னங்களும் பெருமளவிலே மண்ணுள் மண்டி-மறைந்து-புதையுண்டு-கிடக்கின்றன. ஒவ்வொரு கண்டுபிடிப்பும் சீன மக்களினதும் நாட்டினதும் (குறிப்பாகப் பல்லின மக்களினதும்) மகத்தான வரலாற்றை மேலும் சீராகவும் தெளிவாகவும் விளங்கிக் கொள்வதற்குச் சான்றாய் அமைகிறது. நீண்ட வரலாற்றையும் பரந்த நிலப்பரப்பையும் கொண்ட சீனாவில் பல்லாயிரக்கணக்கான புதைபொருள் சின்னங்கள்- கட்டிடங்கள், கல்லறைகள், சிற்பங்கள், ஓவியங்கள், அணிகலன்கள், ஆயுதங்கள், நூல்கள்- கண்டுபிடிக்கப்படுவதில் வியப்பு எதுவுமில்லை. அறிய வேண்டியிருப்பதை அறிந்து அதற்கு வேண்டிய முக்கியத்துவத்தை சீன அரசும் ஆய்வாளர்களும் அளித்து வருவதே நமது கவனத்துக்கு உரியதாகும்.

வரலாற்றை மாற்றியமைத்த சீனமக்கள், வர்க்கப் போராட்டத்தின் விளைவாக வளர்ந்து வந்த வரலாற்றை விஞ்ஞானரீதியாக அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, சரிநுட்பமாகவும் விதிமுறை பிசகாமலும் அகழ்வாய்வுகள் அத்துறையில் பயிற்சியும் பக்குவமும் பெற்றவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 'பீக்கிங் மனிதன்' எனப்படும் ஆதி மனிதன் சம்பந்தமான அகழ்வுகளிலிருந்து, சென்ற நூற்றாண்டுச் சிங் வமிசத்து வழிபாடுகள் தொடர்பான அகழ்வுகள் வரை, சகல வேலைகளும் ஆழ்ந்த பொறுப்புணர்ச்சியுடனும் அப்பழுக்கற்ற ஆய்வறிவு நேர்மையுடனும் பொறுப்பேற்று நடத்தப்பட்டு வருவதைப் பல வழிகளில் காணக்கூடியதாய் இருந்தது. மார்க்சீய விஞ்ஞான அடிப்படையில் இவை மேற்கொள்ளப்படுவதால் நெறிமுறை பிறழாமல் நேர்த்தியாக உள்ளன. பிறநாடுகளிலுள்ள வரலாற்றாசிரியர்கள் இத்துறையில் சீன அகழ்வாராய்ச்சியாளரின் கட்டுரைகளையும் கருத்துமுடிபுகளையும் பெருமதிப்புடன் வரவேற்றுச் சர்ச்சை செய்வதை ஆங்கிலேய, அமெரிக்க, பிரெஞ்சு பல்கலைக்கழகங்களில் பார்த்திருக்கிறேன். சீனாவில் அரும்பொருட் கூடங்கள் அற்புதமாக அமைந்திருப்பதற்கும் இத்தகைய அகழ்வு வேலைகளே அடிப்படைக் காரணமாகும். கடந்த கால்நூற்றாண்டுக் காலத்தில் சீனா முழுவதும் சுமார் முந்நூறு 'மியூஸியங்கள்' தொடங்கப் பெற்றுள்ளன. சியான் நகரில் மாகாண அரும்பொருட் காட்சிக்கூடத்துக்கு விஜயஞ் செய்த போது அதி உன்னதமான காட்சிகளைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது. சியானைத் தலைநகராகக் கொண்ட ஷென்ஸி மாகாணத்தில் மட்டும் கடந்த கால்நூற்றாண்டில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட முக்கியமான அகழ்வாராய்ச்சிகள் நடந்துள்ளன எனத் தெரிய வந்தது.

சியான் நகருக்குச் சிறிது தொலைவில் இருக்கும் புராதன கிராமமாகிய பன்போ என்னுமிடத்துக்குப் போயிருந்தேன். விவசாயத்திற்காக நிலங்களை விஸ்தரிக்கும் வேளையில்- 1952-இல் புதிய கற்கால சமூகம் ஒன்று அகழ்ந்து கண்டுபிடிக்கப்பட்டது. சிறு விவசாயம் அச் சமூகத்தில் நிலவியது. ஏறத்தாழ ஏழாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட அக் கிராமம் சீனாவிலே இது வரை கண்டுபிடிக்கப் பெற்ற மிகப் புராதனமான இரு கிராமங்களின் ஒன்றாகும். மற்றது செக்கியாங் மாகாணத்திலுள்ளது. ஓமுது கிராமம் என வழங்கப்படுவது. ஷென்ஸி மாகாணத்திலுள்ள பன்போ, மஞ்சள் நதிக்கரை நாகரிக வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்க, ஓமுது யாங்ஸி நதிதீரத்து நாகரிக வளர்ச்சிக்குச் சின்னமாக விளங்குகிறது. இதில் என்னை வியப்பில் ஆழ்த்திய விஷயம் என்னவென்றால், பன்போ என்ற இடத்தில் அகழ்வாராய்ச்சி நடைபெற்ற நிலப்பரப்பு முழுவதும் கூரையால் வேய்ந்து அற்புதமாகப் பாதுகாக்கப்பட்டுள்ளது. மழை, வெயில், காற்று முதலியவற்றால் மேலும் அழிவுறா வண்ணம் அருமையாக பேணப்பட்டிருக்கிறது. அப்புராதன கிராமத்தைப் புனருத்தாரணம் செய்தது போல, பண்டு எவ்வாறு இருந்திருக்குமோ அவ்வாறே இயல்பாகக் காட்சிதரும் வகையில் அமைத்துள்ளனர். இத்தகைய முயற்சியை வேறு சில இடங்களிலும் கண்டேன். உதாரணமாக சீனாவை முதன் முதலில் ஐக்கியப்படுத்திய சக்கரவர்த்தியின் கல்லறைக்கு அண்மையிலும் பிரமாண்டமான கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருவதைக் கண்டேன்.

சீன வரலாற்றாராய்ச்சியிலும் அகழ்வாய்வுகளிலும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க ஓர் அம்சம் என்னவெனில், பல இனங்களினதும்- சிறுபான்மை மக்களினதும்- பங்களிப்புகள் உரிய முறையில் ஆராயப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுதலாகும். ஹான் மக்

(பக்கம் IV பார்க்க)

# சீனாவின் நவீனமயக் கொள்கை மாசேதுங் சிந்தனையாலேயே வழிகாட்டப்படுகின்றது!

(பக்கம் I தொடர்ச்சி)

நாட்டில் நவீன மயமானது சமூக ஏகாதிபத்திய நவீன மயமாகவும் உள்ளன. ஆனால் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் சீனாவின் நவீன மயமானது சோஷலிச நவீன மயமாகவே செயல்படுத்தப்படுகின்றது. சீனாவின் இன்றைய நவீன மயப்படுத்தும் கொள்கையானது மாக்ஸ், எங்கல்ஸ், லெனின், ஸ்டாலின், தலைவர் மாஓ ஆகியோர் சோஷலிசக் காலக்கட்டத்தில் ஒரு நாடு எவ்வாறு தனது நிர்மாணத் துறையில் முன்னேற வேண்டும் என்ற அறிவுறுத்தல்களுக்கு இணங்கவே செயல்படுத்தப்படுகின்றது.

பாட்டாளி வர்க்கமும் ஏனைய உழைக்கும் மக்களும் ஆட்சி அமைப்பைக் கைப்பற்றி தமது அரசியல் அதிகாரத்தை நிறுவிக் கொண்டதும் பொருளாதார நிர்மாணத்திற்கே முதன்மை இடம் கொடுத்தல் வேண்டும். வர்க்க சமுதாயம் ஒன்றில் பொருளாதார நலன்களே பல வேறு வர்க்கங்களின் மிகவும் அடிப்படையான நலன்களாகும். ஒவ்வொரு வர்க்கமும் தனது சொந்த பொருளாதார நலன்களை நிலைநிறுத்திக் கொள்வதற்காகத் தவிர்க்க முடியாமலே ஏனைய வர்க்கங்களுக்கு எதிராகத் தீர்க்கமான வர்க்கப் போராட்டங்களில் ஈடுபடுகின்றது. வர்க்கப் போராட்டம் பிரதான வடிவமாக வந்து அதனூடாகப் பொருளாதாரம் அதன் செறிவான வெளிப்படைகின்றது. இதன் காரணமாகவே விரோத வர்க்கங்களுக்கு எதிரான போராட்டங்களைப்பற்றி லெனினும், மாவோவும் கூறும் போது அரசியல் என்பது வர்க்கங்களுக்கு எதிரான போராட்டங்கள் என்றனர்.

உள்நாட்டு வெளிநாட்டு வர்க்க எதிரிகளுக்கு எதிரான இராணுவப் போராட்டம் 1920ன் பிற்பகுதியில் முடிவடையும் தறுவாயில் லெனின் ''படிப்படியாகப் போராட்டத்தின் குவிமையம் பொருளாதாரக் கொள்கைக்கு மாற்றப்பட வேண்டிய''தன் அவசியத்தைத் திட்டவட்டமாகச் சுட்டிக் காட்டினார். அவரது அபிப்பிராயத்தின்படி'' இப்போதைய எமது பிரதான கொள்கை அரசைப் பொருளாதார ரீதியில் வளர்த்தெடுப்பதேயாகும்- அதிக தானியத்தை அறுவடை செய்ய வேண்டும், அதிக நிலக்கரியைத் தோண்டி எடுக்க வேண்டும், இந்தத் தானியத்தையும், நிலக்கரியையும் எவ்வளவு திறம்பட உபயோகிக்க வேண்டுமென்பதைத் தீர்மானிக்க வேண்டும். எமது சகல விதமான கிளர்ச்சியும் பிரச்சாரமும் இந்த இலக்கை மையமாகக் கொண்டிருத்தல் வேண்டும். சிறந்த பேச்சைக் குறைத்துக் கொள்ளல் வேண்டும்- சிறந்த பேச்சுக்களின் மூலம் உழைக்கும் மக்களைத் திருப்திப்படுத்த முடியாது'' 'பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் உள்ள ஒரு நாட்டில் வர்க்கப் போராட்டம் தொடர்ந்தும் இருக்குமென்பதையும், ஆனால் நாட்டின் பிரதான அரசியல் சோஷலிச நிர்மாணத்தை வளர்த்தெடுப்பதேயாகுமென'' அவர் தெளிவுபடுத்தியிருந்தார்.

இதன் அடிப்படையிலேயே தலைவர் மாவோ ''கட்சி வேலையின் ஈர்ப்பு மையம் கிராமத்திலிருந்து நகரத்திற்கு மாறிவிட்டது'' எனப் புதிய ஜனநாயகப் புரட்சி நாடு தழுவிய வெற்றியடையும் தறுவாயில் குறிப்பிட்டு ''ஒரு நகரத்தைப் பொறுப்பேற்ற நாளிலிருந்து உற்பத்தியைப் பழைய நிலைக்குக் கொண்டு வந்து வளர்த்தெடுத்தலிலேயே எமது கவனத்தைச் செலுத்தல் வேண்டும்'' எனவும் தெரிவித்திருந்தார். அது மட்டுமல்ல நகரத்தில் செய்ய வேண்டிய ஏனைய வேலைகள் ''உற்பத்தியும் நிர்மாணமும் என்ற பிரதான குறிக்கோளைச் சுற்றியும் அதற்கு ஏற்றாற் போலவும் இருத்தல் வேண்டும்'' என்றார்.

சீனாவின் தானிய அறுவடை 1978ல் 30 கோடி 47 இலட்சம் தொன்களாக இருந்தது. இது 1949ம் ஆண்டின் அறுவடையான பதினொரு கோடி தொன்களுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க சாதனைதான். பருத்தியின் உற்பத்தி கடந்த முப்பது ஆண்டுகளில் மூன்று மடங்காக அதிகரித்து விட்டது. உணவுக்கான எண்ணெய், சீனி, புகையிலை, தேயிலை, பட்டுப்பூச்சி என்பன பத்துப் பன்னிரண்டு மடங்காக அதிகரித்து விட்டன.

எவ்வாறாயினும் சீனாவின் பண்படுத்தப்பட்ட நிலம் உலகில் பண்படுத்தப்பட்ட நிலத்தில் ஏழு வீதமாக இருப்பதுடன் உலகின், சனத்தொகையில் ஐந்தில் ஒரு பகுதி மக்களுக்கு இதிலிருந்து உணவளிக்க வேண்டுமென்பதை நாம் கருத்திற் கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம்.

— ஸ்ரீதரன் —

## விவசாயத்துறைக்கு நவீன மயத்தின் முக்கியத்துவம்

சில காலத்திற்கு முன்பு விவசாயத்தை இயந்திரமயமாக்குதல் என்பது பண்படுத்தப்பட்ட நிலத்தை 70 தொடக்கம் 80 வீதமானவற்றை ட்ராக்டர்கள் மூலம் உழுதல் எனக் கருதப்பட்டது. ஆனால் இன்று ட்ராக்டர்கள் உபயோகிப்பது மட்டுமல்ல பயிர் செய்கையில் பல்வேறு கட்டங்களும் இயந்திரமயமாக்குதல்படல் வேண்டுமென்பது உணரப்பட்டுள்ளது. இயந்திரமயமாக்குதல் என்பது வனப்பாதுகாப்பு, நீரில் இருந்து பெறப்படும் உணவுப் பொருள்கள், நிலங்களை விவசாயத்திற்கு உகந்ததாக்குதல், கால்நடை வளர்ப்பு, பயிர் உற்பத்திப் பொருள்களைப் பதப்படுத்தல், போக்குவரத்து, குளிரூட்டும் வசதி என்பனவற்றையும் உள்ளடக்கியது என்பது ஏனைய நாடுகளின் அனுபவத்திலிருந்து கண்டு கொள்ளப்பட்டுள்ளது, அத்துடன் நாட்டை மின்சாரமயமாக்குதல், முழு இடங்களுக்கும் நீர்ப்பாசன வசதி செய்தல், பரந்த அளவில் உரத்தையும், விவசாய இரசாயனங்களையும் உபயோகித்தல் எனப் பொருள்படும்.

எனவே விவசாயத்தை இயந்திரமயமாக்குதல் என்பது சுலபமான காரியமல்ல. அது ஏனைய துறைகளின் முன்னேற்றத்திலும் தங்கியுள்ளது அதே சமயம் கைத்தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருள்களை விவசாயத்துறையினர் வழங்க வேண்டும்.

பண்முகப்படுத்தப்பட்ட விவசாயத்திற்காக உபயோகிப்பதற்கு பரந்த நிலப்பரப்பு சீனாவிடம் உண்டு- ஆனால் அவற்றைப் பிரயோசனமான வகையில் உபயோகிக்க வேண்டுமானால் கைத்தொழில் வளர்ச்சி அதிகரிக்கவேண்டும். இவ் வளர்ச்சி இருந்தால் மட்டுமே பாதுகாப்பைப் பலப்படுத்த முடியும், இவற்றையெல்லாம் செய்வதற்கு விஞ்ஞானம் துரிதமாக வளர்ச்சியடையவேண்டும். எனவே நான்கு நவீனமயமாக்கல் என்பது- இயந்திரமயமாக்கல் என்பது ஒன்றையொன்று சார்ந்துள்ளது. நவீனமயமாக்குதல் மூலமாகவே மக்களின் அதிகரித்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். அப்படியானால் மட்டுமே கமயூனிச இலட்சியமான தேவைக்கு ஏற்ற பண்டங்களை வழங்கக்கூடிய நிலை ஏற்படும். இதை உணர்ந்துதான் லெனின் அவர்கள் ''கம்யூனிசமென்பது முழு நாட்டையும் மின்சாரமயப்படுத்துதல்'' என்ற வார்த்தைகளுக்குள் அடக்கினார்.

சீனாவின் பொருளாதாரத் திட்டங்கள் யாவும் விவசாயம் -சிறு கைத்தொழில்- கனரகக் கைத்தொழில் என்ற முன்னுரிமைப்படி முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே நவீனமயமாக்கலில் விவசாயத்திற்கு உரிய அக்கறையும் முன்னுரிமையும் இயற்கையானதே.

பத்துக்கோடி ஹெக்ரர் பண்படுத்தப்பட்ட நிலத்தில் நாலரைக் கோடி ஹெக்ரர் நிலம் மட்டுமே நீர்ப்பாசன வசதியுடையதாயிருக்கிறது. 1985ம் ஆண்டளவில் இது ஆறுகோடி ஹெக்ரர் நிலத்திற்கு விஸ்தரிக்கப்படும். மேலும் புதிதாக எண்பது இலட்சம் ஹெக்ரர் நிலம் விவசாயச் செய்கைக்கு உட்படுத்தப்படும்.

1920ம் ஆண்டு நீர்பாசனத் தொழிலாளர்களின் அனைத்து ரஷ்ய மகாநாட்டில் லெனின் சொற்பொழிவாற்றுகையில் ''பாட்டாளி வர்க்கம் பலாத்காரத்தினால் மட்டும் அதிகாரத்தை வைத்திருக்க முடியாது'' எனவும் ''கலாச்சாரமடைந்த, தொழில் நுட்பம் தாங்கிய முற்போக்கு முதலாளித்துவத்தின் முழு அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதோடு இந்த மக்கள் அனைவரது சேவைகளையும் பெற்றுக் கொள்வதால் மட்டுமே அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்ள முடியுமென''த் தெரிவித்திருந்தார்.

''சோவியத் அரசாங்கத்தின் உடனடிக் கடமைகள் (1918)'' என்ற வெளியீட்டில் லெனின் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் முன்னேறிய விஞ்ஞானம், தொழில் நுட்பம், உற்பத்தி- முகாமைத்துவத்துவம் என்பவற்றினது அனுபவத்தோடு கலாச்சாரச் சாதனைகளையும் பெற்றுக் கொள்வதாலேயே சோஸலிசத்தின் வெற்றி சாத்தியமாகுமென்றார். குறிப்பிட்ட கட்டுரையைத் தயாரிக்கும் போது லெனின் பின்வருமாறு சூத்திரமொன்றைக் குறிப்பிட்டிருந்தார். சோவியத் அரசாங்கம் + பிரஷிய புகையிரதப் பாதையின் நல்ல ஒழுங்கு + அமெரிக்கத் தொழில் நுட்பமும், ரஷ்ட்டுகளும் + ஐக்கிய அமெரிக்காவின் தேசியக்கல்வி முதலானவை என்பவற்றின் மொத்தம் சமன் சோஷலிசம் என்பதாகும்.

இதிலிருந்து லெனின் அவர்கள் சோஷலிசத்தின் வெற்றி என்பது முன்னேற்றமடைந்த நாடுகளின் சகல முற்போக்கான அம்சங்களை அந்தந்த நாட்டின் சூழ்நிலைக்கு ஏற்பப் பிரயோகிப்பதிலேயே தங்கியுள்ளது என்பதை விளக்கினார்- இது எவ்வகையிலும் சுயசார்புக் கொள்கைக்கு முரண்பட்டதல்ல. என்பதையே காண முடிகின்றது. எனவே சீனாவின் இன்றைய சோஷலிச நவீனமயமானது லெனின், மாஓ ஆகியோர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமையவே முன்னெடுக்கப்படுகின்றது.

பக்கம் I தொடர்ச்சி

கம்யூனிஸ்ட் கட்சி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும், பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தையும் அமுல்படுத்தி தாம் மேற்கொண்டிருக்கும் புதிய நீண்ட பயணத்தில் சீன மக்களை வெற்றிப்பாதையில் வழிநடத்திச் செல்வார்கள் என்பதே உலகப் பாட்டாளி வர்க்கத்தினதும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களினதும் பெரும் நம்பிக்கையாகும்.

## சீனாவில் வரலாற்று ஆராய்ச்சி...

(பக்கம் III தொடர்ச்சி)

களே பெரும்பான்மையினராக இருப்பினும், தொன்று தொட்டு சீன நாகரிகத்தில் கலப்புகள் ஏற்பட்டு வந்துள்ளன. ஆய்வாளர்கள் எத்தகைய துவேஷ மனப்பான்மையுமின்றி சகல இன மக்களினதும் வரலாற்றைத் தருக்கரீதியாகவும் தரவுகளுடனும் ஆராய்ந்து வெளிப்படுத்தி வருகின்றனர். இது நமது கவனத்திற்குரியதாகும். எத்தனையோ நாடுகளில்- குறிப்பாக பல்லின மக்கள் வாழும் நாடுகளில்- அகழ்வாராய்ச்சி, இனக்குரோதங்களுக்கும், துவேஷங்களுக்கும், போட்டா போட்டிகளுக்கும் பலியாகி விடுகிறது. புதைபொருள் உண்மையைத் துலக்குவதற்குப் பதிலாக உண்மை குழி தோண்டிப் புதைக்கப்பட்டு விடுகிறது. சோஷலிச சீனாவின் அகழ்வாராய்ச்சி வளர்ச்சியும், முன்னேற்றமும் அடிப்படையில் விஞ்ஞான சோஷலிசத்தின் வெற்றி விளைவாகும்.

கடந்த சில காலமாக, சீனாவிலே சிறுபான்மை இனத்தவர்களின் சுயாட்சிப் பிரதேசங்களில் அகழ்வாராய்ச்சிகள் வேகமாக நடைபெறத் தொடங்கியுள்ளன. சோஷலிஸத்தின் வளர்ச்சி அதிகரிக்க அதிகரிக்க, தேசிய இனப்பிரச்சினையும் அதிகம் அதிகமாகத் தீர்வு காணப்பெறுகிறது. அந்த வகையில் ஹைனன் தீவிலிருந்து திபெத் பிரதேசம் வரை அண்மையில் பல அகழ்வாராய்ச்சிகள் நடந்துள்ளன. இவற்றால் சீன மக்கள் வரலாறும், அதனூடாக இறுதியில் மனுக்குல வரலாறும் மேலும் விளக்கம் பெறும் என எதிர்பார்க்கலாம். இத் துறையில் சீனாவிலிருந்து புதிய நூல்கள் வெளிவருவதும் கவனிக்கத் தக்கதே.

## தொழிலாளர் விரோதச் சட்டத்தை

# தொண்டமான் ஆதரிக்கிருரா?

இலங்கையிலே மிகப் பெரியதொழிற்சங்கத்தலைவர் திரு. தொண்டமான் அவர்களே. இலங்கையிலே மிகக் குறைந்த சம்பளத்தைப் பெறுபவர்களும் தோட்டத் தொழிலாளர்களே. தோட்டத் தொழிலாளர்களின் துயரங்களை அறிந்தவன் நான், அதனாலேயே தோட்டத் தொழிலாளர்கள் என்னை தங்கள் தலைவராக ஏற்றுக்கொண்டுள்ளார்கள். அவர்களின் சார்பாகவே நான் அமைச்சர் பதவியையும் பெற்றுக் கொண்டேன். தோட்டத் தொழிலாளர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டால் நான் ஒரு நிமிஷம் கூடப் பொறுக்கமாட்டேன் என்றெல்லாம் போகும் இடமெல்லாம், கிடைக்கும் வரவேற்பெல்லாம் பேசி வருகிறவர் நம்ம தொண்டமான் ஆச்சே. அப்படியானல் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்யக் கூடாது அப்படி மீறி வேலை நிறுத்தம் செய்தால் சிறைத்தண்டனை கிடைக்கும் என்று ஒரு சட்டத்தை அரசாங்கம் கொண்டுவர இருக்கின்றது. அதாவது அத்தியாவசியப் பொதுச் சேவைகள் சட்டம் என்பதாகும். இந்தச்சட்டத்தை நம்ம தொண்டமான் மிகவும் நல்ல சட்டம் - நல்லசட்டம் என்று ஏன்தான் சொல்லுகிறாரோ தெரியவில்லை. வேலை நிறுத்தம் என்ற ஒரு விஷயம் நமக்கு இருப்பதால்தான் ஓரளவுதானும் தோட்டத் தொழிலாளர்கள் நிர்வாகங்களின் அநியாயங்களைத் தட்டிக் கேட்கக்கூடியதாக உள்ளதல்லவா? ஆனல் தொண்டமான் நல்லசட்டம் என்று சொல்லும் அந்த தொழிலாளர் விரோதச் சட்டம் வந்தால் தோட்டத் தொழிலாளர்களின் கதி என்னவாகும். ஏனைய தொழிலாளர்களுக்கு இருக்கின்ற வேலை நிறுத்தம் செய்யும் உரிமை என்ற பாதுகாப்பு அழிக்கப்பட்டுவிடும். எனவே தொண்டமான் ஆதரவு கொடுத்தாலும் சரி, அல்லது கொடுக்காவிட்டாலும் சரி நமது உரிமையை நாமே பாதுகாத்துக் கொள்வது நமது கடமையாகும். இப்படி ஒரு சட்டம் வந்தால் அதைச் சாட்டாக வைத்தே தோட்டத் தொழிலாளர்களை எவ்வித கோரிக்கைகளுக்கான போராட்டத்திலும் இறங்க விடாது தடுத்துவிடலாமென தொண்டமான் யோசிக்கின்ருர் போலும். எவ்வளவு சட்டங்களைக் கொண்டு வந்தாலும் எவ்வளவு ஏமாற்றுக்களையும் செய்தாலும் ஏனைய தொழிலாளர்களோடு சேர்ந்து தோட்டத் தொழிலாளர்களும் நிச்சயம் தமது வேலை நிறுத்தம் செய்யும் உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுத்தே தீருவார்கள்.

ஆர். மாரியப்பன்

## அத்தியாவசிய பொதுச்சேவைகள் மசோதா

முன்பக்கத் தொடர்ச்சி......

எவ்வித தங்கு தடையும் இல்லை. அந்நிய பொருட்களின் இறக்குமதிக்கு கதவுகள் தாராளமாகத் திறந்து விடப்பட்டுள்ளன. உள்ளூர் உற்பத்தி முற்றாக சீர்குலைந்துள்ளது. மக்களின் வாழ்க்கைத் தரம் என்றுமில்லாத அளவிற்கு மோசமாகியுள்ளது. வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பிற்கும், பொருட்களின் உச்ச விலைகளுக்கும் ஐம்பத்திஐந்து ரூபா சம்பள உயர்வு ''யானையின் வாயில் ஈ புகுந்தது'' போலவே உள்ளது. இது வரை அரசாங்கம் அத்தியாவசியப் பொருட்களுக்கு ஏற்றிய தாறுமாறான விலைகளுக்கும், மிகவிரைவில் ஏற்படவிருக்கும்பல மோசமான விலை உயர்வுகளுக்குமிடையிலே ஐம்பத்திஐந்து ரூபாவைக் கொடுத்து ஒரு சமாளிப்புச் செய்துள்ளது. ஆனல் எப்பொழுதும் மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் அநீதிகளும் கொடுமைகளும் இழைப்பதில் பழக்கப்பட்ட யூ. என். பி. அரசு அதற்குப் பிரதி உபகாரமாக மக்கள்-தொழிலாளர்கள் என்ன செய்வார்கள் என்பதை அனுபவ பூர்வமாக உணர்ந்ததாலேயே நாட்டு மக்களின் எழுச்சிக்கு வழிகோலக் கூடிய தொழிலாளர்களின் வேலை நிறுத்த நடவடிக்கையை முறியடிக்க மசோதாவைக் கொண்டுவந்துள்ளது. எனவே அத்தியாவசிய பொதுச் சேவைகள் மசோதா தொழிலாளி வர்க்கத்தை மட்டுமன்றி முழு மக்களையும் பயமுறுத்தி அடக்கும் ஒரு மசோதா என நாம் கூறுகின்றோம்.

அதி உத்தமர் என்று கூறப்படும் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன சர்வதேச நிறுவனங்களின் முன்னிலையில் உரையாற்றும் போது மனித உரிமைகள் பற்றியும், அடிப்படை ஜனநாயக உரிமைகள் பற்றியும் உயர்ந்த சொல்லரங்காரத்தைப் பாவித்து இன்றைய கௌதம புத்தராக மாற முயலும் அந்த வேளை தனது சொந்த நாட்டில் அடிப்படை மனித உரிமையை மறுக்கும் ஒரு மசோதாவைச் சட்டமாக்க முயலுவது அவரது உண்மை நிலையை மக்கள் முன் அம்பலமாக்கியுள்ளது. எனவே நாட்டின் சகல தொழிலாளர்களும் இன மொழி வித்தியாசமோ அல்லது வேறு குறுகிய குரோத மனப்பான்மையை விட்டொழித்து தொழிலாளி வர்க்கத்திற்கு விடுக்கப்பட்டிருக்கும் பெரும்சவாலை எதிர்த்துப் போராட வேண்டியது அவசியமாகும். தொழிலாளி வர்க்கத்தின் ஒன்றுபட்ட குரலை வலுப்படுத்தி சகல மக்களின் ஆதரவையும் பெற்று அரசாங்கம் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அத்தியாவசிய பொதுச் சேவைகள் மசோதாவை வாபஸ் பெறச் செய்ய வேண்டும் என நாம் சகலரையும் வேண்டுகின்றோம்.

## தமிழர் கூட்டணித் தலைவர்கள்

1-ம் பக்கத் தொடர்ச்சி......

பறையின் கர்வத்தோடு பேசியவர்கள் இன்று பெட்டிப் பாம்பாக மாறி மகுடி ஊதுபவனின் விருப்பத்திற்கு ஆடவேண்டி ஏற்பட்டுள்ளது பரிதாபத்திற்குரிய தொன்றேயாகும். ஆழ்ந்த ஆராய்வும், சரியான கொள்கையும், நீண்ட அரசியல் நோக்கும் அற்று வெறும் மேலெழுந்தவாரியான கோஷங்களும் கொள்கைகளும் ஈற்றில் தோல்வியையும் அடிபணிதல்களையும் ஏற்படுத்தும் என்பதை தமிழ் மக்களும் இளைஞர்களும் ஆழ்ந்து சிந்திப்பதற்கு இன்றைய சூழ்நிலை தகுந்த நேரமாகும். இன்றைய அனுபவங்கள் எதிர்காலத்தில் தமிழ் மக்கள் சரியான ஒரு அரசியல் பாதையையும்-கொள்கையையும் தேர்ந்தெடுப்பதற்கு உதவி செய்யும் என்றே நம்புகின்றோம்.

அன்று எப்படி எப்படியோ எல்லாம் பேசிய கூட்டணித் தலைவர்கள் இன்று எங்கெங்கு நின்று எவ்வாறோ எல்லாம் அளந்து கட்டுகிருர்கள். தமக்குத் தேவையான சகலதையும் பின் கதவாலும் முன் கதவாலும் பெற்று திருப்தி கொள்கிருர்கள். அதற்கு நன்றி சொல்லும் விதத்தில் பேச்சுக்களும் நிகழ்த்துகிருர்கள், அதைப்பற்றி யாராவது பிரச்சினை கிளப்பினல் அபிவிருத்திக்கான ஆலோசனை, அரசியல் சாணக்கியம், அப்படித்தான் இன்றைய நிலையில் பேசவேண்டும் என்றெல்லாம் நியாயம் கற்பித்தும் வருகிருர்கள், ஆனல் தமிழ் இளைஞர்கள் மத்தியில் இளனீர் குடித்தவர் யாரோ இருக்க கோம்பை சுமந்தவர்கள் யாரோ என்ற நிலையே காணப்படுகின்றது.

இன்று ராகத்தை மாற்றியுள்ள கூட்டணித் தலைவர்கள தமது பழைய ராகத்தை மீண்டும் எப்போது மீட்டுவார்கள். சில வேளை மார்கழி கடைசிவாரத்திற்குப் பின் நிலைமைகள் தமக்குச் சாதகமாக அமைந்தால் மட்டுமே பெயரளவிற்காவது பழைய ராகம் மீட்கப்படும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. தலைவர்கள் பழையதைப் புரட்டினலும் சரி அல்லது புதியதொன்றைக் கண்டுபிடித்தாலும் சரி, தமிழ் மக்கள்- இளைஞர்கள் மிகவும் சரியான ஒரு பாதைக்கு தம்மை இட்டுச் செல்வது அவசியமாகும்.

1980ம் ஆண்டிற்கான
சீனசஞ்சிகைகளுக்கு சந்தா
ஏற்றுக்கொள்ளப்படும்
**வசந்தம் புத்தக நிலையம்**
முனீஸ்வரன் வீதி, — யாழ்ப்பாணம்

எமது ஆங்கில வெளியீடான
**Red Banner** (அக்டோபர் இதழ்)
வெளிவந்துவிட்டது

## ஐ. நா. சபைக் கூட்டத்தில் சோவியத் - வியட்னம் கும்பலுக்கு

# பலத்த அடி

சில வாரங்களுக்கு முன் கியூபாவின் தலைநகரான ஹவானாவில் நடைபெற்ற அணிசேரா இயக்க உச்சி மாநாட்டில் ஜனநாயகக் கம்பூச்சியாவின் ஆசனத்தைக் கைப்பற்றி தமது பொம்மை ஆட்சியான ஹெங் சமறீன் கும்பலுக்கு வழங்க சோவியத்-வியட்நாம் ஆக்கிரமிப்பாளர்கள் பெரு முயற்சி செய்தனர். ஆனல் இச் சூழ்ச்சிக்கு எதிராக பல நாடுகள் எதிர்ப்புத் தெரிவிக்கவே கம்பூச்சிய ஆசனத்தை தற்காலிகமாக வெறுமையாகவிடவேண்டும் என்று கியூபா வற்புறுத்தியது. அணிசேரா இயக்கத்தைப் பலவீனப்படுத்த விரும்பாத பல நாடுகள் மனமின்றி அத் தீர்மானத்தை சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப ஏற்றுக் கொண்டன. ஆனல் இந்த நிலையைத் தமக்கு ஒரு வெற்றியெனக் கருதிய சோவியத்- வியட்நாம் ஆக்கிரமிப்பாளர்கள் அதே விளையாட்டை ஐ. நா. சபையின் 34 வது பொதுச் சபைக் கூட்டத்திலும் விளையாட முன் வந்து முகத்தில் நல்ல அடியை வாங்கிக் கொண்ட சம்பவம் கடந்த வாரம் நடைபெற்றுள்ளது. கம்பூச்சியாவிற்கான ஐ. நா. சபை ஆசனம் பொல்பொட் தலைமையிலான ஜனநாயக அரசாங்கத்திற்காக அல்லது சோவியத்- வியட்நாம் கைப்பொம்மையான ஹெங் சமறீன் கும்பலுக்காக வழங்கப்படவேண்டும் என்ற பிரச்சினை கிளப்பப்பட்டது. இப் பிரச்சினை பற்றி ஆராய்வதற்கு ஒன்பது நாடுகளைக் கொண்ட ஒரு குழு நிறுவப்பட்டு அக் குழு பொதுச் சபைக்கு விஷயத்தைச் சமர்ப்பிக்கும்படி தீர்மானிக்கப்பட்டது. இக் குழு ஜனநாயகக் கம்பூச்சியாவிற்கு ஆதரவாக ஆறு வாக்குகளையும். பொம்மை அரசுக்கு ஆதரவாக மூன்று வாக்குகளையும் அளித்தது. இக் குழுவின் முடிவு பொதுச்சபை வாக்கெடுப்பிற்கு விடப்பட்ட பொழுது பொல்பொட் தலைமையிலான அரசாங்கம் தான் உண்மையான அரசு எனக் கூறி 71 நாடுகள் வாக்களித்தன. பொம்மை அரசுக்கு 34 வாக்குகள் மட்டுமே கிடைத்தன. ஏனைய 34 நாடுகள் கூட்டத்திற்கு சமூகம் கொடுக்கவில்லை. பெரும்பாலான அங்கத்துவ நாடுகளின் ஆதரவைப் பெற்று ஜனநாயககம்பூச்சியா தனது ஆசனத்தை பாதுகாத்துக் கொண்டது. ஜனநாயகக் கம்பூச்சியாவின் நீதியான கோரிக்கைக்கு சீன, ஆசியான் நாடுகள், மற்றும் மூன்றாம் உலகநாடுகள் பல உறுதியான ஆதரவை தெரிவித்து நின்றன. பொம்மை ஆட்சிக்கு ஆதரவாக சோவியத்யூனியன், வியட்நாம், கியூபா ஆகிய நாடுகளும் சில கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் நின்றன. ஜனநாயகக் கம்பூச்சியாவிற்கு கிடைத்த ஆதரவு சோவியத்- வியட்நாம் கும்பலுக்கு முகத்தில் கிடைத்த பெரும் அடியாகவே அரசியல் அவதானிகள் கருதுகிருர்கள். சில மேற்கு நாட்டு நிருபர்களின் கூற்றுப்படி ''அணிசேரா இயக்க மாநாட்டில் ஏற்பட்ட ஆத்திரத்தைப் பல மூன்றும் உலக நாடுகள் காத்திருந்து சோவியத்- வியட்நாம்- கியூபக் கும்பல்களுக்கு ஐ. நா. சபையில் பலத்த அடியாகக் கொடுத்திருக்கின்றன'' என வர்ணித்துள்ளனர்.

### அடுத்த இதழில்

- ★ என். எம். பெரேரா பற்றிய ஒரு கண்ணோட்டம்
- ★ கம்பூச்சிய கம்யூனிஸ்ட் கட்சியும் 19 ஆண்டுகளும்
- ★ அக்டோபர் 21 எழுச்சி பற்றிய கட்டுரை
- ★ முதலாளித்துவத்தின் கோரப்பிடியில் சிறுவர்களின் பரிதாபம்

**சீன மக்கள் குடியரசின் 30 வது தேசிய தின விழா**

- ★ பொதுக் கூட்டம்
- ★ சீனப் புத்தகக்கண்காட்சி
- ★ சீனத் திரைப் படம்

**28ம், 29ம் திகதிகளில் யாழ் - றிம்மர் மண்டபத்தில் நடைபெறும்**

அச்சுப்பதிப்பு: யாழ்ப்பாண அச்சகம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் வெளியீடுபவர்; சி. நவரெத்தினம் 15/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.